
www.padippakam.com

# புன்னகை மலர்

ஒக்டோபர் - 1993



மாத இதழ் $1.00

படிப்பகம்

www.padippakam.com

# முக்கிய அறிவித்தல்

## தமிழர் மத்தியில்
## 1994
## AMIDST TAMILS

விருதுகளையும், பலரது பாராட்டையும் அபிமானத்தையும் பெற்ற
தமிழ் மக்களின் சொத்தாகிய தமிழருக்கான தகவல்கள்,
விளம்பரத்தொகுப்பு, சிறிய கைநூல்த் தொகுப்பு
மற்றும் பல விஷேட விடயங்கள் அடங்கிய
தமிழர் மத்தியில் –1994 ல்

1. விளம்பரங்கள்,
2. சங்கங்கள், பழைய மாணவ அமைப்புகளின் விபரங்கள்,
3. விளையாட்டு அமைப்புகளின் விபரங்கள்,
4. தமிழருக்குத் தேவையான தகவல்கள்,
5. வரும் புத்தாண்டில் இடம்பெறும் நிகழ்ச்சி விபரங்கள்,

போன்றவற்றைத் தர விரும்புவோர்,
தயவுசெய்து உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்:

**முடிவு திகதி - END OF OCTOBER 1994**

KUMAR - (416) 321 1354
MOHAN - (416) 495 1223
KUNA - (416) 502 1423
BALA - (514) 762 9795 (MONTREAL)

**Nand@ publications**
*Publishers of "Amidst Tamils"*

4 Baldoon Rd., Scarborough
Ontario. M1B 1V7
Tel: (416) 321 1354
Fax: (416) 321 3944

படிப்பகம்

www.padippakam.com


# புன்னகை மலர்

ஒக்டோபர் 1993

ஆசிரியர்:
ஆர்.என். லோகேந்திரலிங்கம்

பக்க வடிவமைப்பு:
K.மகேந்திரமோகன்
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

அட்டை வடிவமைப்பு:
R. நந்தகுமார்

அச்சிட்டவர்கள்:
சாங்கர் அச்சகம் (ஸ்காபறோ)

வெளியீடு:
பாபா பப்ளிக்கேஷன்ஸ் நிறுவனம்



தபால் முகவரி:
**Punnagai Malar**
P.O.Box # 72005
Centenary P.O
2898 Ellesmere Road
Scarborough, Ontario
M1E 4B0, Canada
**Tel: (416) 283-4375**
**(416) 264-2715**
**Fax: (416) 264-5595**


# புதுமைகள் செய்வோம்

மேலை நாடுகளில் பல்கிப்பெருகி வருகின்றது, எம் தமிழ் மக்களது தொகை. அதற்கேற்ப எம் கலை கலாச்சார இலக்கிய முயற்ச்சிகளும் வீறுநடை போடத் தொடங்கியுள்ளன. உல்லாசப் பயணங்கள் செய்வதற்காக நாம் உலக நாடுகளை வந்தடையவில்லை. எம் தாயகத்தில் நிகழும் கொடூரமான போர்ச்சூழல் எம்மை புலம் பெயர வைத்தது. துயர அனுபவங்களோடு அவசர அவசரமாக புலம் பெயர்ந்த நாடுகளில் கால்பதித்த நாங்கள் இங்கு அழுது புலம்பிக் கொண்டிருக்க வேண்டும் என்று நாம் கூறவில்லை. குருதியும் கண்ணீரும் பாய்ந்தோடும் அந்த மண்ணை எப்போதும் நினைவிற் கொண்டு எமது இயல்பான விடயங்களில் அக்கறை செலுத்துதல் வேண்டும். அவ்வாறான வெளிப்பாடுகளில் ஒன்றே எமது கலை, இலக்கிய முயற்ச்சிகள். அவை நிதானமும் நேர்மையும் இணைந்த போர்க்குரலாக ஒலிக்க வேண்டும்

எம் தாயகத்திலும் எமது அயல் நாடான பாரதத்திலும் மீண்டும் குருதி வெள்ளம். இலங்கையில் வடக்கில் நிகழும் அரச பயங்கரவாதம் அண்மையில் எம்மக்களில் பல உயிர்களை குடித்துள்ளது. வட இந்தியாவில் எதிர்பாராத விதமாக இடம் பெற்ற பூமியதிர்ச்சியில் பல்லாயிரக் கணக்கானவர்கள் புதையுண்டும், கொலையுண்டும் போனார்கள். இவர்களுக்கான எம் கண்ணீர்த்துளிகளை அஞ்சலிகளாக்குகின்றோம்.

அட்டைப்படம்:-
ஜேர்மனியில் தனது நடன அரங்கேற்றத்தை அண்மையில் நடாத்திய செல்வி யாமினி சர்வானந்தன்



படிப்பகம்

www.padippakam.com

# சஞ்சீவனின் இரண்டு பக்கங்கள்

● தமிழகத்திலிருந்து அண்மையில் கனடாவிற்கு விஜயத்தை மேற் கொண்டிருந்த எழுத்தாளர் சுந்தர ராமசாமி இங்கு நடந்த இலக்கியக் கலந்துரையாடலில் எதிர்பாராத கேள்விக்கணைகளுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இங்கிருந்து வெளிவரும் "காலம்" என்ற காலாண்டுச் சஞ்சிகை வெளியீட்டாளர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இலக்கியக் கலந்துரையாடலில் ஈழத்து இலக்கியம், ஈழத்து படைப்பாளிகளான கே. டானியல், டொமினிக் ஜீவா தொடர்பான விடயங்கள் அங்கு விவாதிக்கப்பட்டன. "கே. டானியலின் எழுத்துக்கள் நிலைக்கக் கூடியவை அல்ல" என்று ஒரு சந்தர்ப்பத்தில் சுந்தர ராமசாமி கூறிய போது சபையில் இருந்து பலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கே. டானியலின் படைப்புக்களுக்கு தமிழகத்திலும், ஈழத்திலும் கிடைத்த அங்கீகாரம், கே. டானியல் அனுபவ பூர்வமாக எழுதி வெளியிட்ட "உலகங்கள் வெல்லப்படுகின்றன" போன்ற நூல்களுக்கு கிடைத்த வரவேற்பு ஆகியவை பற்றியெல்லாம் சபையிலிருந்தவர்கள் போர்க்கணை தொடுத்தார்கள். சில சந்தர்ப்பங்களில் அது தன்னுடைய சொந்தக் கருத்து என்று அவர்களை சமாளிக்கும் வகையில் சுந்தர ராமசாமி பதில் அளித்தாகவும் தெரிய வருகின்றது.

● ஈழத்து எழுத்தாளர்களான செ. கணேசலிங்கன், செ. யோகநாதன், செங்கை ஆழியான், காசி ஆனந்தன் ஆகியோர் இப்போது தமிழகப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதத் தொடங்கியுள்ளார்கள். அண்மையில் "சுப மங்களா" என்ற மாத சஞ்சிகையின் இரண்டு இதழ்களில் செ. கணேசலிங்கன், செங்கை ஆழியான் ஆகியோரது சிறுகதைகள் வெளிவந்தன. இந்த இரண்டு கதைகளுமே "தற்போதைய" யாழ்ப்பாணத்தை படம் பிடித்துக் காட்டவில்லை என்பது வாசகர்கள் பலரது அபிப்பிராயம். செங்கை ஆழியான் தனது சிறுகதையில் ஒரு "பழைய போத்தல்" விற்கும் சிறுவனை முக்கிய பாத்திர மாக்கியிருந்தார். கதையின் சம்பவங்கள் எதுவுமே சமகால ஈழத்தை பிரதிபலிக்கவில்லை. செ. கணேசலிங்கன் எழுதிய "ஆண்மை இல்லாதவன்" என்ற சிறுகதையிலும் பத்து வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்தைப் போன்ற ஒரு சம்பவத்தை கதைப் புலமாக்கியிருந்தார். அதைப்பற்றி இங்குள்ள பல வாசகர்கள் தங்களுக்குள் விவாதித்துக் கொண்டது சஞ்சீவனின் காதுகளிலும் வந்து ஒலித்தது. அதே கதை வெளிவந்த "சுபமங்களா" விற்கு அதன் வாசகரான, சென்னை 50ஐச் சேர்ந்த கே. எஸ். சுப்பிரமணியம் (இவர் சிலவேளை இலங்கையராக இருக்கலாம்) ஒரு கடிதம் எழுதியிருந்தார். இங்குள்ள வாசகர்களின் பார்வைக்காக அக்கடிதத்தை அப்படியே பிரசுரிக்கின்றோம். யூன் மாத இதழில் "ஆண்மை இல்லாதவன்" என்னும் சிறுகதையை பிரபல இலங்கை எழுத்தாளர் செ. கணேலிங்கன் எழுதியிருந்தார். கதை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. தனக்கே உரிய பாணியில் இனப்பிரச்சனை காரணமாக அரசுப் படைகளால் இளஞர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதையும், இச்சித்திரவதையில் ஆண்மையை இழந்துவிட்ட இளைஞன் தன் காதலியை நேருக்கு நேர் சந்திக்க முடியாமல், வேறு இடம் சென்று போராட்டத்துக்கு மேலும் மக்களைத் திரட்டும் பணியில் ஈடுபடுவதையும் ஆசிரியர் அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். பெரும்பான்மை இனமான சிங்கள மக்கள் மத்தியில் அராஜகத்தின் மொத்த உருவமான சனத்சில்வா போன்ற சுயவர்களும், அதேவேளை தனது இனத்தவனையே 'சாடிஸ்ட்' என வருணிக்கும் மனிதாபிமானமும்



படிப்பகம்

www.padippakam.com

# சஞ்சீவனின் இரண்டு பக்கங்கள்

மனித நேயமும் மிக்க எக்க நாயக்காக்களும் இன்னமும் வாழ்கின்றார்கள் என சித்தரித்துள்ளதின் மூலம் தமிழ் மக்களும், சிங்கள மக்களுக்கு இனரீதியாக ஒருவருக்கொருவர் எதிரிகள் அல்லர் என்பதையும் வெகு அழகாகக் காட்டியுள்ளார். காலத்துக்குக் காலம் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இனவாத அரசியல் வாதிகள் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்ற இனத்தையும், மதத்தையும் பயன்படுத்தியதின் விளைவுதான் இனப்பிரச்சினை இன்று விசுவரூபம் எடுத்துள்ளது. இந்த உண்மையை இன்றைய சூழ்நிலையில் எம்மால் கிரகித்துக் கொள்ள முடிகின்றது. இலங்கை எழுத்தாளர்களான செ. கணேசலிங்கன், செ. யோகநாதன், டொமினிக் ஜீவா எனத் தமிழ் நாட்டு மக்களால் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர்களும் கூட. ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்கு முன்பாக இலங்கையின் தமிழ் பிரதேசங்களில் பதிவு செய்கின்றார்களே யொழிய 86க்குப் பின்பாக அங்கு தோன்றியுள்ள நிலைமைகளைக் கரிசனை எடுத்து தமிழ் நாட்டு மக்களுக்குக் கொடுப்பதில் பின்நிற்கவே செய்கின்றனர். ஏன் இந்த நிலை? வடக்கும், கிழக்கும் "தமிழர்களது" கட்டுப்பாட்டில் இருக்கும் இன்றைய சூழ்நிலையில் பெருமளவில் இலங்கைத் தமிழ் மக்கள் இந்தியாவிலுள்ள அகதி முகாம்களிலும் ஏன், சிங்கள மக்கள் நிறைந்து வாழும் கொழும்பு, திருமலை போன்ற இடங்களிலும் தஞ்சம் புகுந்திருக்கும் இன்றைய சூழ்நிலை எமக்கு எதைக் காட்டுகிறது? ஆண்மை இல்லாதவன் கதையில் வரும் சனத்சில்வாவை விட மிகக்கொடிய 'சாடிஸ்டுகள்' தமிழ் மக்கள் மனத்தில் தோன்றி வயோதிகர்களையும், பெண்களையும், இளைஞர்களையும், யுவதிகளையும் கூட மிகக் கொடிய முறையில் சித்திரவதை செய்வதை அனைவரும் அறிவர். கொழும்பு நாலாவது மாடியும், பூசாவும் என்றிருந்த நிலைமாறி வடக்கு, கிழக்கில் எண்ணற்ற சித்திரவதை முகாம்களும், சிறைச்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நூற்றுக் கணக்கானவர்கள் 'காணாமற் போனோர்' பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். பலர் இருபத்தி நான்கு மணிநேரம் 'பங்கர்களில்' பூட்டிய சங்கிலிகளோடு நாளாந்தம் அணுஅணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கணேசலிங்கன் போன்ற முற்போக்கு யதார்த்த எழுத்தாளர்கள் இன்றைய இலங்கைத் தமிழ் மக்களின் யதார்த்த நிலைகளை தமது இலக்கியங்கள் வாயிலாக வெளிக்கொணர வேண்டும்.
அத்தகைய படைப்புகளை நாம் தொடர்ந்து எதிர் பார்க்கலாமா?

● கனடிய பாராளுமன்ற பொது தேர்தல் இம்மாதம் 25ம் திகதி நடைபெறவுள்ளது. ஈழத்து தமிழ்க் குடிவரவாளர்கள் பெருமளவில் கனடிய பிரஜா உரிமை பெறத் தொடங்கியதன் பின்னர் நடாத்தப்படுகின்ற பாராளுமன்ற பொதுத் தேர்தல் என்ற வகையில் எம்மக்கள் மத்தியில் இத்தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி தம் வீட்டு "கஜானா"வை நிரப்பும் எண்ணத்தோடு வருகின்றவர்கள் அல்ல கனடிய அரசியல் வாதிகள். பொருளாதாரப் பிரச்சனைகள் என்பது கனடிய அரசைப் பொறுத்தளவில் பெருமளவில் இல்லை. மற்றைய நாடுகளுக்கு இன்னமும் உதவிகளைச் செய்து வருகின்ற நாடு இது. ஆனால் நாம் பிறந்த நாட்டிலோ நிலைமை தலைகீழ். மற்றைய நாடுகளிடமிருந்து "பிச்சை" எடுக்கும் பணத்தை சுருட்டிக் கொண்டு போகும் அரசியல் வாதிகளின் நிழல்களில் வளர்ந்தவர்கள் நாங்கள். எனவே இங்கு நாம் வாக்களிக்கும் போது எமது மனநிலையை மாற்றிக் கொள்ளவேண்டிய அவசியம் எமக்குண்டு.



படிப்பகம்

www.padippakam.com

# பாவம் உந்த நாயன்!

(ஜோர்ஜ் இ. குருஷ்சேவ். இந்தப் பெயரானது தற்போது பத்திரிகை உலகின் ஊடாக கனடாவிலும், ஏனைய புலம் பெயர்ந்த நாடுகளிலும், ஏன் ஈழத்திலும் தமிழகத்திலும் கூட நன்கு அறியப்பட்ட ஒன்றாக இருக்கின்றது. சிலருக்கு இது ஒரு புனைபெயரோ என்ற சந்தேகமும் எழலாம். கம்யூனிஸ்டாக வாழ்ந்து வந்த ஒரு தந்தை மீதும் கொண்டிருந்த அபிமானத்தால். தனது மகனுக்கு சூட்டி மகிழ்ந்த "ஆசை"ப் பெயரே இந்த ஜோர்ஜ் இ. குருஷ்சேவ். "தாயகம்" என்ற வாரப்பத்திரிகை மூலம் தனது அரசியல் இலக்கியம் சார்ந்த கொள்கைகளை வெளிப்படுத்தி வருகின்ற இவர் அதன் ஆசிரியருமாவார் சிறந்த சிறுகதைகளையும் அவ்வப் போது எழுதிவருகின்ற இவரது சிறுகதை யொன்றை "புன்னகை மலர்" முதலாவது இதழிலேயே பிரசுரிப்பதில் பெருமையும் பெரு மகிழ்ச்சியுமடைகின்றோம். ஆ+ர்)

## ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

ஊரில் காலையில் கண் விழிக்கும் போது அணில் கத்தும், புலுணி என்ற பறவை கத்தும். காகம் கத்தும். கடிதம் வரப் போகுது என்று அக்காவும் ஆரோ ஆக்கள் வரப்போகினம் என்று அம்மாவும் சொல்லிக் கொள்வார்கள். அல்லது தூரத்தில் தோட்டங் களில் வாட்டர் பம்ப் இறைக்கின்ற சத்தம் கேட்கும். அதையும் மீறி உறங்கினுல்.. பரதேசி எழும்பனடா என்று அம்மா முதல் அக்கா வரை அபிஷேகம் செய்வார்கள்.

ஆனுல் இங்கே.. நிலைமை வேறு.. நேர காலம் தெரியாமல் போன் அடித்து அவனவன் அறுப்பான். அல்லது கீழே ரேட்டில் போகின்ற வாகனங்களின் சத்தம் எரிச்சலைத் தரும். இதெல்லாம் சகஜம். போர்வையை இழுத்து மூடினுல் போகிறது. ஆனுல் என் றூம் மேட் மாயவனின் சத்தம் காதைப் பிளக்கும். போன் எடுத்தால் யாரையாவது திட்டுவது அல்லது புகழ்வது.. இதைத் தவிர இவன் வேறு எதையும் செய்ததை நான் காணவில்லை. யாராவது எனக்குத் தெரியாத ஒருவனை 'அவன் அருமையான ஆள், உவனைப் போல ஆக்களைக் காணேலாது' என்று புழுகித் தள்ளுவான். கொஞ்ச நாளில் அதே வாயால் 'உவனும் ஒரு மனிசனே?' என்று திட்டித் தீர்ப்பதையும் கேட்கலாம்.

இவன் எதிர்பார்த்த ஒன்றை அவன் செய்யாதிருக்கக் கூடும். அல்லது செய்த உதவிகள் ஒன்றை அவன் நிறுத்தியிருக்கக் கூடும். அல்லது இவனுக்கு கொடுத்த கடனை அவன் கேட்டிருக்கக் கூடும்.

இவன் எவரைப் பற்றி என்ன நினைக்கிருன் என்பது இன்றைய மார்க்கட் நிலவரம் மாதிரி அன்றன்று கேட்டு அறிந்து கொள்ள வேண்டியது தான். தான் நல்லவன் என்று சொன்ன அதே வாயால் நாக் கூசாமல் திட்டுகிறதையிட்டு யாரும் எதுவும் நினைப்பது பற்றி அவனுக்கு கவலையில்லை. அதைப் போல, தனக்கு பிடிக்காதவர்கள் பற்றி யார் எவர் என்றில்லாமல்



படிப்பகம்

www.padippakam.com

போனில் அகப்படுகின்ற எல்லாருக்கும் ஒலிபரப்பு செய்யாவிட்டாலும் அவனுக்கு பத்தியப்படாது. அதோடு அவன் திட்டுகின்ற ஒருவருக்கு வக்காலத்து வாங்க நீங்கள் புறப்பட்டீர்களானல் தொலை ந்தீர்கள். பிறகு உங்களையும்.. உவனும் ஒரு மனிசனே? என்று தொடங்கி விடுவான்.

இது மாதிரி இன்று காலையும் யாரையோ திட்டிக் கொண்டிருந்தான். 'எளியதுகள், இங்க வந்து கனடியன் கவண்மென்ரிட்ட தின்னுதுகள். இதுகளின்ர சேட்டையளால எங்களுக்கு தலைநிமிர்ந்து நடக்கேலாமல் இருக்கு'. இவன் யாரைச் சொல்லுகிருன்? எனக்கு றெஸ்ரோறன்ட் வேலை இரண்டு மணிக்குத் தான். உடனே எழும்ப வேண்டும் என்ற அவசரமும் இல்லை. இரவு ஒரு மணிக்கு வந்து படுத்த அசதியும் கூடவே. கொஞ்சம் காதைக் கொடுத்துப் பார்த்தேன். 'நாயள், ஸ்பொன்சர் பண்ணி வந்திட்டு வெல்பெயர் அடிக்குதுகள். நாங்கள் இங்க நேர்மையாய் போனல் ஆயிரத்தெட்டு கேள்வி கேட்கிருளவை.. உவளுக்கு என்ன? ஏதோ தன்ரை காசைத் தாற மாதிரி'

இப்போது வெல்பெயர்க்காரிக்கு நடக்கிறது திட்டு. இதே அவளைத் தான் 'அருமையான மனிசி. போய் சொன்னன், உடன அனுப்புறன் காசு எண்டவள்' என்று புழுகியிருந்தான். மற்ற றூம் மேட்களுக்கு இவன் ஒரு ஆபந்பாந்தவன். மாயவன் எண்டா எங்க போறதெண்டாலும் வரச் சொல்லிக் கேட்டால வருவான், உந்தக் கழுதை நெடுக கோப்பை கழுவப் போக வேணும் எண்டு ஓண்டுக்கும் வாறேலை என்று மற்றவர்கள் சொல்வது எனக்கு கேட்பதுண்டு. மாயவனுக்கு வேலை இல்லை, கடைத் தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு உடைப் பதில் வலுவீரன். தேவைப் பட்டால் என் காரை தூக்கிக் கொண்டு போய் மற்றவர்களுக்கு அபயமும் அளிப்பான். கார் கொடுத்த நான் திட்டு வாங்க.. மாயவன் காருக்கு பெற்ரேல் விடாமலே வெறுமையாய் கொண்டு வந்து வைப்பான் என்பதெல்லாம் அவன் நண்பர்களுக்குத் தெரியாது.

வெல்பெயர் எடுப்பதற்கு அப்படி என்ன நேர்மை வேண்டிக் கிடக்கிறது என்பது எனக்கு இன்னும் புரியவில்லை. காதைக் கொடுத்துக் கேட்டால் இவனுக்கு போன கிழமை வெல்பெயர் வந்திருக்க வேண்டும், வரவில்லை. வெல்பெயர் ஓஃபீசில் போய் நின்று அவளோடு தனக்கு தெரிந்த ஆங்கிலத்தில் பேசப் போக.. அவள் போய் வேலை தேடியதற்கு ஆதாரம் கேட்டிருக்கிருள். அது தந்தால் தான் காசு என்றதால் வந்த வினை. இப்போது அவள் முதல் இங்கு வெல்பெயர் எடுக்கின்ற மற்ற தமிழர்கள் வரை இவன் திட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிருன்.

'மற்ற ஆக்களின்ரை பேப்பரில வேலை செய்து உழைக்கிருங்கள். அதுக்குள்ள வெல்பெயர். உந்த எளியதுகளால எங்களுக்குப் பிரச்சனை' இவனுக்கு மீண்டும் அவள் பணம் அனுப்பும் வரை நாங்களும் இங்கு இருந்தபாடில்லை. மற்ற தமிழர்களின் மீதான வசையும் முடியாது. உந்த தொல்லை யிலிருந்து விடுபட நான் அந்தக் காசைக் கொடுத்தால் என்ன என்று கூடத் தோன்றும்.

எழுந்து வெளியே வந்தேன். வெளிக்கிட்டுக் கொண்டிருந்தான். 'எங்க ஆயத்தம்?' 'ஒருக்கா கண்ணதாஸ் இமிக்கிரேசனுக்கு வரச் சொன்னவன்' இவன் தனக்கு இமிக்கிரேஷன் வேலை எண்டால் வேற ஆரையும் கூட்டிக் கொண்டு போறவன். அதுக்குள்ள இவனை கூப்பிட்ட அந்த புண்ணியவான் யாரோ?

மெதுவாய் மசிந்தான். வாஷ்றூமின் உள்ளே பல் தீட்ட 'ஒருக்கா கார் வேணும்'

'இல்லை, நான் வெளிய போக வேணும்'

அவன் கதவை அடித்துச் சாத்திய வேகம் 'உவங்கள் எல்லாம் எப்ப காரைக் கண்டவங்கள்?' என்று சொன்னது. தலைவிதி!

★ ★ ★

வீட்டுக்குள் சத்தம் அதிகமாய் கேட்டது. கதவைத் திறந்தால் போத்தல் மணமும் ஹை வொலியூமில் பாட்டும் அறையை நிறைத்திருந்தன. இன்னெரு றூம் மேற்றுக்கு இன்று லாண்டட் பேப்பர் கொடுத்தார்களாம். இவர்கள் பார்ட்டி வைக்க என்றே பிறந்த கூட்டம். ஏன், எதற்கு என்றெல்லாம் கிடையாது. இதைச் சாட்டியே தண்ணியடிக்க அலையும் கூட்டம்.

லாண்டட் கிடைத்தவன் ஊரில் திருவிழா உபயகாரர்கள் திருவிழா நாட்களில் வேட்டி கட்டிக் கொண்டு இடுப்பில் சால்வையைக் கட்டிக் கொண்டு நிற்பது மாதிரி, புதிய சேட்



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றை மாட்டிக் கொண்டு அடிக்கடி போத்தலுக்கு காசை இழுத்துக் கொண்டிருந்தான். அவனவன் ஒவ்வொரு பியர் போத்தலுக்குள் நீந்தி விளையாட... மாயவன் தான் அங்கும் guest speaker.

இந்த நாயள் இங்கை நிக்கேக்கை மட்டும் ஊருக்குப் போனுல் ஆமி சுடும், புலி சுடும் எண்டு சொல்லுறது, லாண்டட் கிடைச்சவுடன சடங்கு முடிக்கப் போயிடுவினம். உதுகளாலே தானே எங்களுக்கு பேப்பர் தாராமல் இழுக்கிருன்..

செத்த வீடுகளில் கிழவிகள் இறந்தவருக்காக அழாமல் தங்கள் பிள்ளைகள், கணவன்மாருக்காக அழுவது மாதிரி.. மாயவன் திட்டத் தொடங்கினுன். எனக்கு ஒரு மாதிரி இருந்தது. லாண்டட் கிடைச்சவன் இதையெல்லாம் விளங்கி முகம் சுழிக்கும் நிலையில் இல்லை. அவனும் விஸ்கி கிளாசை ஒரு கையிலும் மற்றக் கையால் சுவரையும் பிடித்தபடி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு 'மச்சான், இதைக் கேளடா' என்று நீண்ட நேரமாக திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டிருந்தான்.

இப்போது கனடிய அரசாங்கம் முதல் அகதிகள் வரை திட்டு நடக்கிறது. களவாய் தலைமாத்தி வாருங்கள் என்றுன். இவன் கூட அப்படி வந்தவன் தான். 'உங்க பார், உதுகளை.. போய் கலியாணம் கட்டிப் போட்டு ஸ்பொன்சர் பண்ணுமல் களவாய் கூட்டிக் கொண்டு வந்து வெல்பெயர் அடிக்குதுகள்'

இவனது இந்தக் கதைகள் இவனை ஒரு கொள்கைப் பிடிப்புள்ளவன் என்ற பிரமையை பலருக்கு ஏற்படுத்தியதால் அடிக்கடி இவனுக்கு போன் அடித்து சில வெண்காயங்கள் இவனிடம் போய் ஆலோசனையும் கேட்பதுண்டு.

அடிக்கடி வீட்டிலிருந்து கடிதம் வரவும் மாயவனின் திட்டுதல் கூடியது. என்னவென்று விசாரித்தால் யாரோ ஒரு பெண்ணை இவனுக்கு கலியாணம் பேசி படம் அனுப்பி யிருக்கிறுர்கள். அந்தப் பெண்ணோடு இவனுக்கு மானசீகக் காதல் போலும். அந்தப் பிரிவு இவனை வாட்டுகின்ற நேரங்களில் கனடியன் இமிக்கிரேஷன் முதல் பிரதமர் வரை நடக்கும் திட்டு.

★ ★ ★

நீண்ட நாட்களின் பின் வேலை விட்டு வரும் போது மாயவன் யாருடனே போனில் பேசிக் கொண்டிருந்தான். அன்று யாரையும் அவன் திட்டவில்லை. ஆச்சரியமாய் போய் விட்டது. பிறகு தான் அறிந்தேன். இவனது திட்டுக்கள் தாங்காமலோ என்னவோ கனடிய அரசாங்கம் ஒரு நாள் பொறுமையிழந்து மாயவனுக்கு லாண்டட் பேப்பரைக் கொடுத்து விட்டது. 'உவங்கள் நாசமாய் போகப் போருங்கள்' என்ற இவனது சாபம் பலித்து இந்த முறை தேர்தலில் மண் கவ்வ வேண்டி வருமோ என்ற பயத்தில் அரசாங்கம் இதைச் செய்திருக்க வேண்டும். அல்லது லிபரல் கட்சி இவனை தங்கள் பிரசாரப் பீரங்கியாகப் பயன்படுத்தக் கூடும் என்ற பயமாகவும் இருக்கலாம். இவன் அரசாங்கத்தைப் பற்றி எதையும் சொன்னுல் வாக்காளர்கள் என்ன ஆதாரமாக கேட்கப் போகிறுர்கள்?

யாருக்கோ போன் அடித்தான் மாயவன்.

'மச்சான், எனக்கு ஒரு பேப்பரும் பாஸ்போட்டும் எடுத்துத் தாறியோ?'

'...'

'நாலாயிரம் கூடிப் போச்சு'

'.....'

'அப்ப கேட்டுச் சொல்லு. இன்னும் ரெண்டு மாதத்தில போறன். அங்க அப்பா, அம்மாவைப் பாத்து ஏழெட்டு வருசமாச்சு. கலியாணமும் பேசியிருக்கினம். போய் முடிச்சிட்டன் எண்டால் மனிசியைக் கூட்டிக் கொண்டு வாறதுக்குத் தான் பேப்பர் கேட்டனுன். ஸ்பொன்சர் பண்ணினுல் வெல்பெயர் எடுக்கேலாது'

★ ★ ★

எனக்குத் தலை சுற்றியது. இதே மாயவன் இந்த சிறீலங்கா பாஸ்போட்டைப் பார்த்து எயர்போட்களில் அவர்கள் அலுப்புக் கொடுக்கும் போதும் 'உந்த நாயளைத்' திட்டுவான். அங்கே எயர்போட்டில பொலிஸ்காரனும் இமிக்கிரேஷன்காரனும் காசு பறிக்கும் போதும் 'உந்த நாயளைத்' திட்டுவான். அங்கே கொழும்பில் பொலிஸ்காரன் பிடித்துக் கொண்டு போகும் போதும், மீண்டும் எயர்போட்டில் கனடியன் எம்பாஸிக்கும் போகும்படி சொல்லும் போதும், கனடியன் எம்பாஸியில் அவலப்படும் போதும், மனைவியை களவாய் கொண்டு வரும் போதும், பிடிபடும் போதும் உந்த நாயளைத் திட்டுவான். பிறகு இங்கே வெல்பெயர் அடிக்கும் போதும்... பாவம் 'உந்த நாயள்!'



படிப்பகம்

www.padippakam.com


ஸ்காபரோ நகரில் **Morningside & Ellesmere** சந்திக்கருகில்



# எஸ்.கே. சுப்பர் மாக்கற்

## S.K. SUPER MARKET

790 MILITARY TRAIL, SCARBOROUGH

**TEL: (416) 724-5453**

**எங்களிடம்**
தரமான – இலங்கை, இந்திய,
கனேடிய உணவுப் பொருட்கள்
உடன் மரக்கறி, பழ வகைகள்
உடன் இறைச்சி, மீன், நண்டு,
இறால் மற்றும்
கடலுணவுப் பொருட்கள்
**பத்திரிகைகள்**
யாழ்ப்பாணத்திலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
நல்லெண்ணை, புகையிலை,
புளுக்கொடியல், மிளகாய்த்தூள்


தொலைபேசி ஓடர்கள்
ஏற்றுக் கொள்ளப்படும்.
TEL: (416) 724-5453

Scarborough நகரில்
தமிழ் மக்களுக்காக
புதியதோர் அணுகுமுறையில்
**S.K. SUPER MARKET**
வரவேற்கிறார்கள்

ஒரு தடவை விஜயம் செய்யுங்கள்,
உண்மை புரியும்.

எது வேண்டுமானாலும், மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

தரத்தில் – **S.K. SUPER MARKET**
தராதரத்தில் – **S.K. SUPER MARKET**
நியாய விலையில் – **S.K. SUPER MARKET**




ஏழு நாட்களும் திறந்திருக்கும்.



# Saaie Teletape
## VIDEO PRODUCTION

**சாயி ரெலிரேப் வீடியோ தயாரிப்பு**

திருமணம், பிறந்த நாள்
மற்றும் மங்களகரமான
வைபவங்களைச் சிறந்த
முறையில் வீடியோவில் பதிவு
செய்து கொள்ள நாடுங்கள்

VIDEO ACCESSORIES AUDIO,
VIDEO CASSETTES FILM
DEVELOPING & PRINTING,
VIDEO MIXING EDITING, TITLES,
VIDEO TRANSFER TO ANY
SYSTEM



- VIDEO TOASTER EFFECTS
- AUDIO RECORDINGS
- PASSPORT PHOTOS
- FAX SERVICES ALSO AVAILABLE

CONTACT:
நேரு
NEHRU

3 CHIPS CAMERA

1247 ELLESMERE Rd,
SCARBOROUGH,
(ELLESMERE & MIDLAND)
ONTARIO. M1P 2X8

SERVICE BY LONDON (UK) QUALIFIED TECHNICIAN
OVER 14 YEARS OF EXPERIENCE

TEL: (416) 285-8157. (416) 287-1090, FAX: (416) 285-5854




படிப்பகம்

www.padippakam.com

# மெய்யான கலைஞனுக்கு எப்போதும்... கஷ்ட ஜீவிதம் தான்

பாலுமகேந்திரா

அர்த்தமற்ற வன்முறைகளும், கொச்சையான செக்ஸும், படுபிற்போக்கான மூட நம்பிக்கைகளும், யதார்த்தத்திற்கு முற்றிலும் எதிரான கதையமைப்பும், பாத்திரப் படைப்புகளும், மிகைப்படுத்தப்பட்ட நடிப்பு, மற்றும் ஒளிப்பதிவு போன்றவைகளும் தான் இன்று நமது பெரும்பாலான ஜனரஞ்சக (வர்த்தக) சினிமா என்று ஆகிப்போய் விட்டது. நமது பணவேட்கைக்காக மக்களின் ரசனையைப் பிடிவாதமாக மழுங்கடித்துக் கொண்டிருக்கிறோம். சினிமாக்காரர்கள் மட்டுமல்ல, நாடகக்காரர்கள், பத்திரிகையாளர்கள் அரசியல்வாதிகள்.... எல்லோரும்தான்.... என்று கூறும் பாலுமகேந்திரா தமிழ் சினிமாவை அர்த்தமுள்ள திசையில் அழைத்துச் செல்லப் போராடும் கலைஞர், ஈழம் தந்த கலைஞர், தமிழ் சினிமாவில்..... ஏன்....... இந்திய சினிமாவிலேயே இன்று குறிப்பிடத்தக்க படைப்பாளி. பலமுறை தேசிய விருதுகளையும், ஆந்திர, கேரள, கர்நாடக மாநில அரசுகளின் விருதுகளையும் வாங்கிக் குவித்தவர். "மறுபடியும்" படத்தைத் தொடர்ந்து தன் அடுத்த படத்திற்கான கதை விவாதத்தில் ஈடுபட்டிருந்த அவரிடம் புன்னகை மலருக்காக பேசியதிலிருந்து:



**இன்றைய தமிழ் சினிமாவின் போக்கு எப்படி இருக்கிறது?**

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன், அன்றைய தமிழ் சினிமாவைப் பற்றிக் கொஞ்சம் நினைவு கூரலாம். ஒரு இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நம் தமிழ்ப் படங்கள் எப்படி இருந்தன? Say for example, பீம்சிங்கின் சினிமா எப்படி இந்ததது? ஸ்ரீதர், ஏ. பி. நாகராஜன், ப. நீலகண்டன், கிருஷ்ணன், பஞ்சு, கே. எஸ். கோபாலகிருஷ்ணன், தாதாமிராசி போன்றவர்களது சினிமா எப்படி இருந்தது? Films like பாசமலர், பாகப்பிரிவினை, கல்யாணப் பரிசு, நெஞ்சில் ஓர் ஆலயம், நால்வர், திருவிளையாடல், ரத்தக் கண்ணீர், பராசக்தி, பணமா பாசமா, புதிய பறவை..... இந்தப் படங்களில் சினிமா மீடியத்தின் ஆளுமை குறைந்து காணப்படலாம்.... In the sence that, இந்தப்படங்கள் முழுக்க முழுக்க வசனங்களையே நம்பிய, நாடகத் தன்மை கொண்ட. இயல்புத் தன்மை குறைந்த கற்பனைகள் நிறைந்த பக்கா மெலோடிராமாக்களாக இருக்கலாம். ஆனால் அவை ஆரோக்கியமான பொழுது போக்காக இருந்தன. அருவருப்பில்லாத நேரம் போக்காக இருந்தன. மக்களின் மலிவான உணர்வுகளுக்குத் தீனி போடாத நல்ல படங்களாக இருந்தன. ஓரளவு நாகரீகமானவையாகவும், நம்பிக்கையூட்டுபவையாகவும் இருந்தன. ஆனால் இன்று?

ஒளிப்பதிவு, அரங்க அமைப்புபோன்ற டெக்னிக்கல் துறைகளில் அசாத்திய வளர்ச்சியை எட்டியுள்ளோம். சினிமா மீடிய ஆளுமையும் நம்மில் சிலருக்கும் நன்றாக



படிப்பகம்

www.padippakam.com

வே கைவருகிறது. But what about the contents? நமது கதைகளும், பாத்திரப் படைப்புகளும் அவற்றை நாம் எடுத்துச் சொல்லும் விதமும்....? ஓரளவு ஆரோக்கியமாக இருந்த நாம் ரொம்ப ரொம்ப நோய்வாய்ப் பட்டுப்போனோம் என்பது தானே அப்பட்டமான உண்மை?

டெக்னிகல் அசத்தல்களோடு கூடிய ஒரு சராசரிக் குடி மகனது ரசனையைக் காயடிக்கும் வக்கிரம் கொண்ட இன்றையப் படங்களுக்கு நாம் பள்ளிப் பருவத்தில் பார்த்த படங்களே மேல் என்று தானே தோன்றுகிறது. கே. பாலசந்தர், பாரதிராஜா, நான் மகேந்திரா மற்றும் இன்னும் சிலர் எழுபதுகளின் நடுப்பகுதியில் ஒரு புதிய ஆரோக்கியத்தை ஒரு சின்னத் திசை திருப்பலை ஏற்படுத்த முனைந்தோம். அதில் ஓரளவு வெற்றி கிடைக்கும் தருணத்தில்தான் சில ராட்சச நிறுவனங்களும் செல்லரித்த மூளை கொண்ட "சிலரும்" சேர்ந்து ஒட்டு மொத்தமாக அழித்து விட்டார்கள். அத்தோடு பறிபோனது மக்கள் ரசனைதான். அங்கொன்றும் இங்கொன்றுமாக அத்தி பூத்தாற் போல் சில நல்ல படங்கள் வருவது உப்பு நீர்ச் சமுத்திரத்தில் மழைத் தூறல் போலத் தான். No use. நான் இதை நொடிந்து போன ஒரு அவநம்பிக்கையோடு சொல்லவில்லை. இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும் என்ற ஒரு தாகத்தோடு சொல்கிறேன். நல்ல சினிமா ஒரு இயக்கமாக வளரவேண்டும். அப்பொழுது தான் ஏதாவது சாதிக்க முடியும்.

**சரி, கமிர்ஷியல் படங்கள் தான் இப்படி என்றால் கலைப்பட (Art film) உலகிலும் ஒருவேகமும் வீச்சும் இப்பொழுது இல்லையே? அங்கும் ஒரு தேக்கம் நிலவுகிறதே?**

தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை, நீங்கள் சொல்லும் வேகமும் வீச்சும் கொண்ட ஒரு கலைப்பட காலம் எப்பொழுது ஐயா நமக்கு இருந்தது? ஒரு "உன்னைப் போல் ஒருவன்" ஒரு "அக்காரத்தில் கழுதை" ஒரு "அவள் அப்படித்தான், ஒரு "குடிசை", ஒரு "உச்சிவெயில்" ஒரு "தண்ணீர் தண்ணீர்" ஒரு "வீடு" ஒரு "சந்தியாராகம்". ஒரு "மறுபக்கம்", சட்டென்று என் ஞாபகத்திற்கு வராத இன்னும் ஒன்றிரண்டு.... இந்த தம்மாத் துண்டு எண்ணிக்கையிலேயே சில குறைப் பிரசவங்கள்.... சில போலிகள்...... போனால்.... What are we left with? கலைப்படங்களைப் பொறுத் தவரை அன்றும், இன்றும் மந்த நிலைதான்.



**சினிமாவைத் தொழிலாகக் கொண்ட, அதில் கிடைக்கும் வருவாயில் தான் வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலையிலுள்ள உங்களைப் போன்ற கலைஞர்கள் தொடர்ந்து நல்ல படங்களை த்தான் எடுப்பேன் என்று 'விரதம்' இருப்பது சரியா? இது சாத்தியம் ஆகுமா?**

வாழ்க்கையின் தேவைகள் ஆத்மார்த்தமான ஒரு படைப்பாளியின் நோக்கங்கள் - ஆகிய இவை இரண்டுமே என்றும் ஒன்று சேர்வதில்லை. மனசாட்சியுள்ள ஒரு கலைஞனுக்கு என்றும் கஷ்ட ஜீவனம் தான். அவன் சமரசம் செய்து கொள்ளத் தயார் இல்லை. அதனால் வியாபாரச் சந்தையில் விடுபட்டுப் போகிறான். உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படைத் தேவைகளுக்குக் கூட அல்லாடும் நிலை தான். நம்மை விலைகூறி விற்கத் தயாராக இருக்கவேண்டும்..... ஆறு பாட்டு வேணுமா.....சரி! நாலு ஃபைட்டு வேணுமா...சரி ரெண்டு படுக்கையறைக் காட்சி வேணுமா.....சரி! அசட்டுத் தனமா சில காமெடி சீன்ஸ் வேணுமா...சரி, இப்படி வாங்குபவர்களின் தேவைகளுக்கெல்லாம் சரி சரி என்று ஒத்துக்கொள்ள முடியுமென்



படிப்பகம்

www.padippakam.com

றால் பொழைக்கலாம். இல்லேன்னா நாம எடுக்கற நல்ல படங்களால நம்ம மனசுக்குத் திருப்தி கிடைக்குமே தவிர நம்மளும், நம்ம பொஞ்சாதி புள்ள குட்டிகளும் பட்டினி தான். இல்லே அரை வயித்துக் கஞ்சிதான் எப்பவுமே. இப்படித்தான் அரைப் பட்டினி காப்பட்டினி கெடந்துக்கிட்டு "நான் வெலபோகல்ல.... விபச்சாரம் பண்ணல்ல.... ஒங்களுக்கு நம்பிக்கையாக இருக்கேன்" என்கிறதில் ஒரு சொகம்!

ஓரோர் சமயத்தில் இது வேணுமான்னு தோணுது! ரொம்பத் தேவையான்னு தோணுது!

**சினிமா ஒரு பொழுது போக்கு சாதனம் மட்டும் தான் என்று கூறப்படுவது பற்றி....?**

ஒரு தனிமனிதனுக்காகட்டும், அல்லது ஒரு சமூகத்திற்காகட்டும் பொழுது போக்கு Entertainment என்பது மிக அவசியம். ஆரோக்கியமான வாழ்க்கைக்குப் பொழுது போக்கும் அத்தியாவசியம் என்பதில் இரண்டாவது அபிப்பிராயம் கிடையாது. பொழுது போக்கு என்று சொல்லும் பொழுது ஆரோக்கியமான பொழுது போக்கு Healthy Entertainment என்று தான் அர்த்தம். பொழுது போக்கு என்ற போர்வையில் நாம் எடுக்கும் படங்கள் எல்லாம் ஆரோக்கியமான பொழுது போக்காகத்தான் இருக்கின்றனவா என்றால்..... குற்ற உணர்வோடு தலை குனிந்து கொள்ள வேண்டிய நிலை தான் நமக்கு.

ஒரு சராசரிக் குடிமகனது அன்றாட வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து விட்ட இந்த அசுரசக்தி கொண்ட சினிமா என்ற மீடியம் பொழுது போக்கிற்காக மட்டுமே இது உபயோகப் படுத்தப்பட வேண்டும் என்பதைத் தான் நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

**ஒரு நல்ல சினிமாவிற்கு நீங்கள் வைக்கும் அளவு கோல் என்ன?**

முதலில் சினிமா மீடிய மாற்றத்திற்குத் தகுதியான அல்லது இணைந்து கொடுக்கக்கூடிய கதை.

இந்தக் கதை என்னையோ, அல்லது நான் சார்ந்த சமூகத்தையோ ஒரு கிஞ்சிதமாவது மேம்படுத்தும் நோக்கம் கொண்டதெனில் இன்னும் விசேஷம்!

இந்தக் கதைக்கு இயல்புத் தன்மையும், உள இயல் ரீதியான பாத்திரப் படைப்புகளும் அத்தியாவசியம்.

இப்படிப்பட்ட ஒரு கதையை, சினிமா மீடியத்தில் ஆளுமை உள்ள ஒரு படைப்பாளி லாவகமாகச் சொல்லியிருக்கும் பட்சத்தில், அந்தப்படத்தில்..... அவன் சொன்ன விதத்தில் கணிசமான அளவு கலா நேர்த்தியாகவும் கைகூடி வந்திருந்தால், அதை ஒரு நல்ல சினிமா என்று சொல்லலாம்.

**தமிழ் சினிமாவில் இன்று ஒளிப்பதிவு எப்படி இருக்கிறது?**

டெக்னிக்கல் விஷயங்களில் வளர்ந்திருக்கிறது. ஆனால் உபயோகப்படுத்தப்படும் முறையில் ரொம்பத் தவறான பாதையில் போய்க் கொண்டிருக்கிறது. ஒளிப் பதிவு என்பது திரைக் கதையின் தேவைகளை மட்டும் தான் அனுசரித்துப் போகவேண்டும். தனித்து வெளியே தெரியக் கூடாது.

கதையின் தன்மைகளையும் தேவைகளையும் நிராகரித்து, தங்களை அவசரமாக அடையாளம் காட்டி மலிவான கைதட்டல் வாங்கும்ஒரு சைக்காலஜிக்கல் அவஸ்தையில் தான் நமது புதிய ஒளிப்பதிவாளர்கள் பலர் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல வேளையாக மக்களே இவர்களைக் கிண்டலடிக்கவும், புறக்கணிக்கவும் தொடங்கி விட்டார்கள்.

சம்பந்தப்பட்ட இயக்குனர்களையும் தான் நான் குற்றம் சாட்டுவேன். திரைக் கதை மற்றும் பாத்திரப் படைப்பு, உரையாடல், உடை, அரங்க அமைப்பு போன்றவையெல்லாம் இயல்புத் தன்மை கொண்டவையாக இருக்கவேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கிறார்கள். ஆனால் ஒளிப்பதிவை மட்டும் செய்கையாகச் செய்ய அனுமதிக்கிறார்கள்.

தத்ரூபமாக இருக்க வேண்டும் என்று பல லட்சங்கள் செலவு செய்து செட்டைப்போட்டு அந்தத் தத்ரூபவத்தையும், அரங்க அமைப்பாளரின் திறமையையும் Fogfilter கொண்டும் Softfocxus கொண்டும் கெடுத்து விடுகிறார்கள். What



படிப்பகம்

www.padippakam.com

**A Contradiction!**
**கமல், ரஜினி, ஸ்ரீதேவி போன்றவர்களை வைத்து நீங்கள் படம் பண்ணியிருக்கிறீர்கள். ஆனால் இவர்களெல்லாம் அப்பொழுது பெரிய ஸ்டார்களல்ல, சுலபமாகக் கிடைத்தார்கள். இப்பொழுது நிலைமை அப்படியல்ல ஒரு படம் இரண்டு படத்தோட புது முகங்கள் ஸ்டார் ஆகிவிடுகிறார்கள். இந்த நட்சத்திர ஆதிக்கம் உங்களுக்குப் பிரச்சனையாக இல்லையா?**

நான் படம் பண்ணத் தொடங்கிய காலத்தில் இந்த நட்சத்திர ஆதிக்கம் இல்லை என்பது போல பேசுகிறீர்கள். எம்.ஜி.ஆர், சிவாஜி, கே.ஆர். விஜயா போன்ற பெரிய நட்சத்திரங்கள் அன்றும் இருந்தார்கள். நான் அவர்களைத் தவிர்த்துக் கொண்டேன் என்பது தான் உண்மை. ஒரு ஸ்டாருடன் பணிபுரியக்கூடாது என்றெல்லாம் எனக்கு எந்த வைராக்கியமும் கிடையாது. ஸ்டார்களின் ஸ்டார்த்தன்மை நமக்குச் சரிப்பட்டு வராது என்ற ஒரு தயக்கம்...... அவ்வளவு தான். தங்களது ஸ்டார் பந்தாக்களை விட்டு என்னுடன் ஒரு நடிகராக நடிகையாக மட்டும் பணியாற்றத் தயாராக இருக்கும் பக்குவம் கொண்டவர்களை நான் பயன்படுத்திக் கொண்டு தான் இருக்கிறேன். இப்படி நிறையப்பேர் இருக்கிறார்கள். சமீபத்திய உதாரணம் ரேவதி. எனது 'மறுபடியும்' படத்தில் நான் அவரைப் பயன்படுத்திக் கொள்ளவில்லையா



என்ன?

**இந்த ஆண்டின் இந்திய தேசிய திரைப்பட விருதுக் குழுவின் தலைவராக இருந்து வந்துள்ளீர்கள்.... அந்த அனுபவம் பற்றி?**

சில வருடங்களுக்கு முன் இந்தியாவின் ஆறாவது சர்வ தேச குழந்தைகள் திரைப்பட விழாவின், இன்டர்நேஷனல் ஜூரி சேர்மனாகவும் நான் பணியாற்றியிருந்ததால் இது எனக்கு ஒரு புது அனுபவமாக இருக்கவில்லை.

சர்வதேச அல்லது தேசிய திரைப்படத் தேர்வுக் குழு ஒன்றின் தலைவராக இருப்பது மிகவும் பொறுப்புள்ள ஒரு பதவி, இதில் பல பிரச்சனைகளும் உண்டு. But I Loved it. It was a real treat.

நானும் எனது குழுவும் இந்தத் தடவை 105 படங்களைப் பார்க்க வேண்டியிருந்தது. இருபத்தியிரண்டு நாட்கள்.

எனது தனிப்பட்ட கணிப்புப்படி, (இதுவே பெரும்பாலான சமயங்களில் எனது குழுவினர் கணிப்பாகவும் இருந்தது) இந்த 105 படங்களில் மூன்றோ, நான்கோ படங்கள் தான் அற்புதம், அபாரம் என்று சொல்லும் படி இருந்தன.

தேசிய விருது கொடுத்துக் கௌரவிக்கதக்க தரம் கொண்டவையாகப் பல படங்கள் இருந்தன. அவற்றை எல்லாம் கௌரவிக்கவும் செய்தோம். விருதுப் போட்டியில் தோற்றுப் போன விருது பெறாத சில நல்ல படங்களும் இருந்தன.

ஆனால் பெருவாரியான படங்கள் ரொம்ப சுமார் தான். Very Average Film அதுவும் இந்தியிலிருந்து வந்த பொழுது போக்குப் படங்கள்! குப்பை என்று சொல்லும் அளவுக்குத் தரம் தாழ்ந்திருந்தன. அந்த இந்திப் படங்களைப் பார்க்கும் பொழுது, நான் சிறுவனாய் இருந்த காலத்தில் பார்த்த இந்திப் படங்களை மெகபூப் கான், சாந்தாராம், ராஜ்கபூர், குருதத் பிமல்ராய், ரிஷிக்கேஷ் முக்கர்ஜி போன்றவர்களின் படங்களை என்னால் நினைவு கூராமல் இருக்க முடியவில்லை.

அந்த எளிமையையும், நேர்மையும் கொண்ட ஆராக்கியமான பொழுது போக்குப் படங்களுடன் இன்றைய இந்தி சினிமாவை ஒப்பிட்டுப் பார்த்தால்..... Oh What A Drastic Change

**சிறந்த நடிகர் மற்றும் சிறந்த நடிகை ஆகிய விருதுகளுக்குக் கடைசி**



படிப்பகம்

www.padippakam.com

நிமிடம் வரை கடும் போட்டி இருந்ததாமே?

அப்படி இருக்க வில்லை, நீங்கள் கேள்விப் பட்டது தவறான தகவல். இந்த இரண்டு விருதுகளுமே பெரிய போட்டி யில்லாமல் தான் தேர்வு செய்யப்பட்டன. மிதுன் சக்ரவர்த்திக்குப் பத்து வாக்குகளும், டிம்பிள் கபாடி யாவுக்குப் பதின்மூன்று வாக்குகளும் கிடைத்தன. மொத்தம் பதினான்கு வாக்குகள். சிறந்த நடிகரு க்கான போட்டியில் இரண்டா வது ஸ்தானத்தில் வந்த நமது அரவிந்தசாமிக்கு இரண்டு வாக்குகள் ரோஜா படத்திற்காக.

"நீங்க நல்லா இருக்கனும்" என்ற ஒரு ரொம்ப சுமாரா ன படத்திற்கு நீங்கள் விருது கொடுத்திரு க்கிறீகளே....?

விசுவின் "நீங்க நல்லா இருக்கனும்" என்ற படம் சுமாரானது தான் என்பதில் தெரிவுக் குழுவுக்கு இரண்டாவது அபிப்பிராயம் இருக்கவில்லை. ஆனால் இந்த "சிறந்த சமூக நல்க்கருத்துக்கள்" கொண்ட படத்திற்கான விருது மட்டும் வேறொரு கோணத்திலிருந்து நோக்கப்பட்டது.

விதவைகள் நலிவு, குடிப்பழக்கம், போதை மருந்து, விபச்சாரம், கள்ளக் கடத்தல் போன்ற சமூக சீர்கேடுகளை மையக் கருத் தாக வைத்து. அவற்றிற்கு எதிராக ஒரு படம் எடுக்கப் பட்டிருந்தால், அந்தப் படத் திற்கு விருது கொடுக்கலாம் என்பது விதிமுறை. இந்த விருது மட்டும் சொல்லப் படும் கருத்தை முக்கிய மாகக் கொண்டு கொடுக்கப் பட வேண்டிய விருது.

சினிமா மீடிய ஆளுமையும், டெக்னிக்கல் மேற்பாடும் இல்லாதிருப் பினும், ஒரு சமூகச் சீர்கேட்டிற் கெதிராகச் சொல்லப்படும் கருத்து, செய்யப்படும் பிரச்சாரம் எளிய முறையில் மக்களைச் சென்றடையும் படி சொல்லப் பட்டிருந்தால், செய்யப்பட்டி ருந்தால், நாடு இப்பொழுது இருக்கும் நிலை கருதி, இது போன்ற படங்களை எடுக்கப் பலர் முன்வர வேண்டும் என்ற நோக்கத் தோடு, படம் சுமாராக இருந்தாலும், கருத்து தெளி வாக இருந்தால் விருது கொடுப்பில் தவறில்லை என்று சொன்னபோது அதை என் குழு ஏற்றுக் கொண்டது. விருதும் கொடுக்கப்பட்டது.

சந்திப்பு: தமிழகத்திலிருந்து
**சா. பாலசுப்பிரமணியம்**

## அடிமைகள்

*மக்களாட்சி*
*என்றார்கள்*
*தேடினேன்*
*வீதி ஓரத்தில்*
*தாய் மகனை*
*கொஞ்சிக்*
*கொண்டிருந்தாள்*
*"என் ராசாவே"*
*என்று*

**-காசி ஆனந்தன்**

## காவல்

*வரதட்சணைக்காக*
*உயிரோடு*
*எரிக்கப்பட்டவள்*
*சடலம்*
*சுடுகாட்டில்*
*காவல்காரன்மேல்*
*சீறிப்பாய்ந்தது*
*"இங்கே எதுக்கடா காவல்"*

**-காசி ஆனந்தன்**

### "புன்னகைமலர்" சஞ்சிகையின் தமிழகப் பிரதிநிதி

தமிழகத்தின் பிரபல கவிஞரும் "குங்குமம்" வார இதழில் முன்னர் ஆசிரியர் குழுவில் கடமையாற்றி வரும் தற்போது "சுபமங்களா" மாத இதழின் உதவி ஆசிரியராக கடமையாற்றுப வருமான திரு. இளையபாரதி அவர்கள் "புன்னகை மலர்" சஞ்சிகையின் தமிழகப் பிரதிநிதியாக பணியாற்ற சம்மதம் தெரிவித்துள்ளார். "சுபமங்களா" வின் ஆசிரியர் திரு. கோமல் சுவாமி நாதன் அவர்களுடைய ஏற்பாட்டின் படி இந்தப் பணியை ஏற்றுள்ள இளையபாரதி அங்குள்ள படைப்பாளிகள் பத்திரிகையாளர்கள் ஆகியோ ரோடு தொடர்பு கொண்டு "புன்னகை மலரு" க்கான விடயதானங்களை சேகரிப் பதிலும், எமது சஞ்சிகையை தமிழகத்தில் அறிமுகப் படுத்தும் பணியிலும் ஈடுபட்டு ள்ளார் என்ற மகிழ்ச்சியான செய்தியை "புன்னகை மலர்" வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். (ஆ+ர்)



படிப்பகம்

www.padippakam.com

# சந்தர்ப்பம்

குமார் மூர்த்தி

தங்கம்மாவுக்கு இதை விட ஒரு சந்தோஷம் வேறு எதுவும் இந்த உலகத்தில் இருக்க முடியாது என்பதைப் போல வருவோர் போவோரையெல்லாம் வலுக் கட்டாயமாக இழுத்து வைத்து வதனாவைப் பற்றிய ஒரு செய்தியைத்தானும் நீட்டி முழக்கிச் சொல்லாவிட்டால் அன்றைய பொழுது பலனில்லாமல் போய் விட்டது மாதிரி ஒரு தவிப்பு இருக்கும். வதனாவைத் தங்கம்மாவுக்கு எதிரியாக்கிய பௌதீககாரணிகள் எப்போதும் புதுப் புதுப் பரிமாணத்தோடு தோன்றமளித்துக் கொண்டேயிருந்தது. அவளின் ஒரே மகனுக்கும் வதனாவுக்கும் சம வயது என்பதை விட அவன் அடிக்கடி வதானா வீட்டு வழியால் காரணமின்றிச் செல்வதும் கூட பொறுத்துக் கொண்டாலும், ஊராரின் கதைகளைப் பொறுத்துக் கொள்ள தங்கம்மாவால் முடியாதிருந்தது. வதனாவை எங்கு கண்டாலும் இரண்டு வார்த்தை ஏசாமல் விடமாட்டாள்.

இவ்வளவிற்கும் வதனா தங்கம்மாவின் சகோதரனின் மகள் தான். பணத்தைப் பொறுத்த வரை தங்கம்மா கையில் நிறையவேயிருக்கின்றது. அவளது சகோதரன் அன்றாடங்காச்சி தான். இது தான் அடிப்படைக் காரணம். சிறிய எல்லைப் பிரச்சனைக்காக நீண்ட காலமாக கோடு, கச்சேரி என அலைந்ததில் இருவருக்கும் நிறைய பண விரயம் ஏற்பட்டிருந்தது. இருந்தும் கடைசியில் தங்கம்மா பக்கமே தீர்ப்பு சாதமாகப்பட்டது. கோழி அடுத்த வீட்டுக்குள் போய் விட்டது என்றாலே அடிதடியில் முடித்துக் கொள்ளும் சமூகத்துக்கு இவைகள் எல்லாம் வழக்கத்திற்குட்பட்டவைகள் தான். எது எப்படி இருந்தும் தங்களின் அந்தஸ்து கூட வேண்டும் என்பதற்காகவும். மகனுக்கு வதனா குடும்பத்தின் மேல் வெறுப்பு வளர வேண்டும் என்பதற்காகவும். ஒவ்வொன்றையும் திரித்துச் சொல்வதில் தங்கம்மாவுக்கு எப்போதுமே வெற்றி ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது.

சொல்லி வைத்தது போல் வதனாவை வீட்டில் காணவில்லை எங்காவது ஓடிப் போயிருக்கலாம் என்று யாரோ மூலம் தங்கம்மாவின் காதுக் கெட்டிய போது அவள் நின்ற சந்தைக் கட்டிடமே ஒரு முறை சுற்றியது. தலைக்குள் ஆயிரம் பூச்சிகள் குடைய சற்று நேரம் உட்கார்ந்து விட்டாள். இரண்டு மூன்று நாட்களாக மகனின் நடவடிக்கைகள் அவளுக்கு திருப்தி தரவில்லை. என்பதையும், முகத்தில் ஒரு வாட்டம் இருந்ததையும் இன்னும் பல சின்ன சின்ன மாற்றங்களையெல்லாம் நினைத்து எல்லாமே முடிந்து விட்டது என்று ஒரு முடிவுக்கு வந்தவளாக ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு சென்றாள். மகனின் ஒவ்வொரு உடையையும் பொருட்களையும் சரி பார்த்தாள். தொட்டுக் கூடப் பார்த்தாள். அவனைத் தவிர மற்றவை எல்லாம் சரியாகவேயிருந்தது. வெறித்த பார்வையோடு திண்ணயில் உட்கார்ந்திருந்தாள். வெய்யில் கர்ண கடூரமாக எரித்துக் கொண்டிருந்தது. போவோர் வருவோர் எல்லாம் அவளை ஏளனத்துடன் பார்ப்பது போலவும், தன் கௌரவம் எல்லாம் காற்றோடு பறந்து போய் விட்டது போலவும் பிரமைதட்ட ஒரு முறை ஓங்கிக் தலையிலடித்துக் கொண்டாள். அவளின் சூனியத்தைச் சயிக்கிள்ச் சத்தம் கலைத்த பொழுது, நிமிர்ந்து பார்த்தாள். அவள் மகன் வந்து கொண்டிருந்தான். அவன் முகத்தில் எந்தச் சலனமும் காணப்படவில்லை. மெதுவாக தாயின் அருகில் போய் வதனா இயக்கத்திற்கு போய்ச் சேர்ந்து விட்டதாக தான் கேள்விப்பட்டது போல் சொல்லி முடித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

**போ**ன உயிர் திரும்பி வந்தது தங்கம்மாவிற்கு உற்சாகம் கரை புரண் டோடியது... பல கால இடை வெளிக்குப் பின் மகனைப் பார்த்து மனம் நிறையக் கூப்பிட்டாள். பின் அக்கம் பக்கத்தில் எல்லாம் கூட்டிக் குறைத்து விலாவாரியாகக் கதை சொன்னாள். சீதனம் கொடுத்து கலியாணம் செய்து வைக்க வக்கில்லாததால் தாய், தகப்பன் தான் அவளை இயக்கத்திற்கு அனுப்பி விட்டார்கள். அவர்களைப் பற்றி தனக்கு நல்லாவே தெரியும் அப்பிடிச் செய்யக் கூடியவர்கள் தான் என்று அடித்துச் சொன்னாள், இவளவை எல்லாம் இயக்கத் துக்குப் போய் நாடு பிடிப்பாளவையோ அல்லது மாப்பிளை பிடிப்பாளவையோ என்ற கேள்விக்கு யாரும் பதில் சொல்ல மாட்டார்கள். அந்த கேள்விக்குப் பின்னால் ஆயிரம் அர்த்தங்கள் இருக்கும் ஏன் தங்கம்மாவின் வாயைக் கிளறுவான்? என்று ஒதுங்கிக் கொள்வார்கள். துணிந்து ஒரு சிலர் நீயும் பெண்பிள்ளை வைத்திருக் கிறாய் தங்கம்மா யோசித்துக் கதைக்க வேண்டும். வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று கதைக்க கூடாது. உனக்கும் நாளைக்கு இந்த நிலமை வராது என்று சொல்ல முடியுமோ என்று கேட்டு விட்டால்ப் போதும், ஒரு தரம் எகிறிக் குதித்து இப்படிக் கேடு கெட்டதனமாய் என்பிள்ளை ஒரு நாளும் செய்ய மாட்டாள். கிழித்த கோட்டைத் தாண்டாமல்த் தான் வளர்த்திருக்கின்றேன் நான், என்று எல்லாக் கடவுளையையும் சாட்சிக்குக் கூப்பிட்டு சத்தியம் செய்வாள்.

**பொ**ம்மைத் துப்பாக்கி வைத்து சொந்தக் காரியம் பார்த்தவர்கள் எல்லாம் இயக்கம் தொடங்கிய காலம் அது. தங்களுக்குப் பிடித்தமானது அல்லது உறவினர்கள் நண்பர்கள் தெரிந்தவர்கள் யாராவது இருக்கின்ற இயக்கமாக இருந்தால் அதைப்பற்றி உயர்த்திப் பேசியும், வேண்டா தவர்கள் கோபக்காரர் யாரா வது இருந்தால் அந்த இய க்கத்தைப் பற்றி தாழ்த்திப் பேசியும் உயர்ந்த சாதிக்காரர் களுடையது என்றும் தாழ்ந்த சாதிக்காரர்களுடையது என் றும் இன்னும் பலவாறாக இயக்கங்களைப் பிரித்து மகா ஜனங்கள் தங்கள் சுதந்திர த்தையும், ஜன நாயகத்தை யும் பேணிக் கொண்டகாலம் அது. அதுவும் பெண்கள் இருக்கின்ற இயக்கமாக இருந்தால் கதைப்பதற்கு நிறையச் சமாச்சாரங்கள் இருந்து கொண்டேயிரு க்கும், அரசல் புரசலான கதைகளில் இருந்து அரசி யல் கதை வரைக்கும் ஆலா பர்ணத்தோடு அரங்கேற் றப்படும்.

**வீ**ட்டில் கட்டுப் பாட்டோடு இருக்கப் பிடிக் காத பெண்கள் தான் இயக்க ங்களுக்கு போய் சுற்றித் திரிவதாகவும், நல்ல குடும்ப த்துப் பெண்கள் ஒரு நாளும் இயக்கத்துக்கு போகமாட் டார்கள் என்றும் இன்னும் அங்கே அப்படி இங்கே இப்படி என்று நேரில் பார்த்தது மாதிரி விடயங்கள் வர்ணனை செய்வது தங்கம்மா போன்ற வயதான பெண்களுக்கு ஒரு விருப்ப மான காரியமாகவே இருந்தது. இந்தப் பார்வை யில் வதனா போய்ச் சேர்ந்த இயக்கமும் காரசாரமாக விமர்சிக்கப்படும். அவர்கள் எது செய்தாலும் அது நல்ல செயல் இல்லை என்றும், அல்லது நல்லது என்றால் அது அவர்கள் செய்ததாக இருக்காது என்றும் விவாதங்கள் விண்ணை முட்டும்.

**அ**டுத்தவர் கருத்து எப்படியிருந்தாலும் தங்களுக்கு சாதகமானவைகள் மட்டும் தான் சுதந்திரம் என்று எண்ணிக் கொள்ளும் மனப்பாங்கு உள்ளவர்களி டத்தில் எந்தக் கருத்துக் களும் எடுபடப் போவதில்லை. அது விடுதலைப் போராட் டமாக இருந்தாலும் சரிதான் அல்லது வேறு எந்தப் போராட்டமாக இருந்தாலும் சரிதான் அவை ஒரு போதும் வெற்றி பெறும் வாய்ப்பு இருப்பதில்லை.

**அ**ன்று அதிகாலையிலே தங்கம்மாவின் ஒப்பாரி ஊரையே உசுப்பி விட்டது. மாப்பிள்ளை ஜேர்மனியில் நிறைய சீதனத்துடன் அடுத்த மாசம் மகளை அனுப்பிவிடப் போகிறேன், மாப்பிளையைப் பற்றியும் ஜேர்மனியைப் பற்றியும் கொடுக்கப் போகும் சீர் வரிசையைப் பற்றியும்



படிப்பகம்

www.padippakam.com

வாய் ஓயாமல் ஊர் முழுக்க செல்லித்திருந்த தங்கம் மாவுக்கு என்ன நடந்திருக்கும்? ஒரு வேளை அவளது மகனுக்குத் தான் ஏதாவது நடந்திருக்கும் என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் ஓட்டமும் நடையுமாக வீட்டு வாசலுக்கு போன போது தங்கம்மா மண்ணிலும் தலையிலுமாக அடித்துக் கொண்டு பாவிமகள் இப்படிச் செய்து போட்டாளே? பெற்ற வயிறு பற்றி எரியுதே இவள் நல்லா இருப்பாளே? என்னை இப்படி ஏமாற்றி விட்டாளே, இயக்கத்துக்குப் போயிருந்தாலும் சந்தோஷப் பட்டிருப்பேனே. இப்படி எளிய சாதியோட ஓடிப் போய் விட்டாளே? என்று புலம்பிக் கொண்டிருந்தது, றோட்டுக் கப்பால் வெகு தூரத்திலும் கேட்டுக் கொண்டிருந்தது.

*புன்னகை மலர் சஞ்சிகையின் ஒவ்வொரு இதழிலும் உங்களது மழலைச் செல்வங்களின் அழகிய படத்தை நீங்கள் கண்டு மகிழ விரும்பினால் 283-4375 அல்லது 264-2715 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். அல்லது கீழேயுள்ள முகவரிக்கு தபால் மூலம்தொடர்பு கொள்ளவும்.*

"Punnagai Malar"
P.O.Box # 72005
Centenary P.O
2898 Ellesmere Road,
Scarborough, Ontario
M1E 4B0, Canada

## கேள்வி பதில்

பல்வேறு விடயங்கள் தொடர்பான புன்னகை மலர் வாசகர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கப்படும். உங்கள் கேள்விகளை புன்னகை மலர் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். அல்லது 283-4375, 264-2715 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் பதிவு செய்யலாம்.

## மணிவிழாக்காணும் கவிஞர் வி.கந்தவனம்

ஈழத்துக் கவிதை உலகின் மூத்த தமிழ்க் கவிஞரான திரு. வி.கந்தவனம் அவர்கள் இம்மாதத்தில் தனது அறுபதாவது வயதை பூர்த்தி செய்யுமுகமாக கனடாவிலுள்ள கலை, இலக்கிய நண்பர்கள் சேர்ந்து அதை ஓர் விழாவாக நடாத்தஏற்பாடு செய்துள்ளனர். கவிதைத்துறையில் மட்டுமல்ல, வானொலி, பத்திரிகை ஆகிய துறைகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்ற கவிஞரான திரு. வி.கந்தவனம் அவர்களை "புன்னகை மலர்" வாழ்த்தி நிற்கின்றது. (ஆ+ர்)

சகல விதமான அச்சமைப்பு வேலைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்
K. மகேந்திரமோகன்
"MOHAN TYPESETTING"
Tel: (416) 283-8898
Fax: (416) 283-0140



ஒரு சுருதிப் பெட்டி அல்லது ஆகக்கூடியது ஒரு ஆர்மோனியம். இவைகள் தான் நாம் பலகாலமாக கண்டு வந்த வாத்தியக் கருவிகள். உலகில் புதிது புதிதாக அறிமுகமாகும் பல்வேறு துறைசார்ந்த உபகரணங்களும், கருவிகளும் எமது பிறந்த மண்ணை சென்றடைவது சற்று தாமதமாகவே நிகழ்ந்து வந்துள்ளது. இசைத் துறையிலும் நவீனத்துவம் புகுந்துள்ளது. தற்போது மேலை நாடுகளில் பாவனையில் உள்ள இசைத் துறைக் கருவிகளின் பயன்பாடு எம்மில் எத்தனைக் கலைஞர்களை கவர்ந்துள்ளது என்ற கேள்வி எழுவதிலும் நியாயமுண்டு. "மிடி" என்று அழைக்கப்படும் நவீன இசையமைப்பு முறைக்கு கொம்பியூட்டர் பயன் படுத்தப் படுகின்றது. கனடாவில் உள்ள எமது கலைஞர்களில் இந்த "மிடியை" அதிகளவு கையாண்டு வருபவர்களில் மொன்றியல் S. V. வர்மன் முக்கியமானவர். ஒரு இசைக் குடும்பத்தில் பிறந்த இவர் பெருமளவில் சாதனைகள் படைக்க வேண்டும் என்று எந்நேரமும் துடித்துக் கொண்டிருப்பவர். இசைப்பிரியர்கள் இவரது முயற்சிக்கு ஆதரவுக்கரம் நீட்ட வேண்டும்.

—யாழினி



படிப்பகம்

www.padippakam.com

# மண்ணின் நினைவுகள்

சபா வசந்தன்



கண்கள் ஒளியிழந்து கனவுலகில் சஞ்சரிக்க,
அன்றைய நினைவுகள் அலை அலையய் ஆடிவரும்,

முன்பின் கண்டறியா முகமிழந்த மனிதர் இங்கு,
உற்றார், பெற்றார், உடன் பிறந்தார் கவலையின்றி,
நித்தம் ஒரு பியர் கேசும், நின்றாடும் டிஸ்கோவும்
களிக்க ஒரு பெண்ணும், காதலிக்க வேறொன்றும்,
இருந்து விட்டதென்றால் இதுவெல்லோ வாழ்க்கையென்பார்,

கொண்டா அக்கோட்டும், கோபுரமாய் ஒரு வீடும்,
சி டி பிளேயருடன் சீதனமாய் சில லட்சம்,
இத்தனையும் பெற்று, இல்லாளை இரண்டு வேலை,
செய்யச் சொல்லும் எங்கள் செம்மண்ணின் மைந்தர்கள்,

வந்த இடம் இங்கு எம் வாழ்க்கை அழகில்லை,
அன்னிய மண்ணதினில் அர்த்தங்கள் அஸ்தமிக்க,
அன்றைய எம் நினைவுகள் அலை அலையாய் ஆடிவரும்,

ஆட்டுக்குக் குழையொடிக்க ஆளில்லை வீட்டிலிங்கு,
அதுக்குள்ள உனக்கென்ன அறுவானே விளையாட்டு,
அன்புடனே அடிக்க வரும் ஆச்சியும் இறந்து விட,
ஆயிரம் மைல்களுக்கப்பால் அழுதிருக்கும் என் மனது,
விடியற் காலை வெய்யிலுக்கு முன் எழுந்து,
வடகம் செய்யவென வேப்பம் பூ பறித்து,
பழஞ்சோற்றைக் குழைத்து, பலா இலைமேல் வைத்து,
பச்சை மிளகாயோடு பலகாரமும் செய்து தந்து,
பலகாலமாய் எம்மைப் பரிவுடனே வளர்த்து—
ஓடிபிரியும் போது கூட பேரர்கள் அருகிலில்லை,



படிப்பகம்

www.padippakam.com

கோயில் தேர் முட்டியில் குடியிருக்கும் புறாப்போல,
இரண்டு பனை உயரத்தில் இரு அறையுடனே ஒரு வீடு,
இன்பமோ துன்பமோ இதற்குள்ளே அடங்கிவிடும்.,
இதுதான் வாழ்க்கை இங்கு இனிமை இதில் இல்லை,

கனகர் வெளியும், கண்ணகை அம்மன் கோவிலும்,
கல்லெறிந்து புடுங்கும் கறுத்தக் கொழும்பானும்.,
வேலையால் அப்பா வரும் வேளை வரை பயந்து,
பிள்ளையார் கோவிலின் பின் வீதி விளையாட்டும்.,
சந்தியில் கூடி நின்று சரக்குக்கு "மார்க்ஸ்" போடும்,
சிந்தை அறியாச் சிறுபிள்ளைச் சேட்டைகளும்.,
இன்னும் என் இதயத்தில் இனிப்பாய் சுவைக்கிறது,
இனி வருமா இவ் வாழ்க்கையென இதயம் அழுகிறது.,

வாடகை "சமறி", வருமான வரி, வட்டி,
என்று போக இங்கு எதுவுமில்லை மீதி.,
எட்டிலிருந்து ஐந்துவரை இயந்திரமாய் ஓடி,
இன்பமின்றி வாழ்க்கை கழிந்திடுமே பாதி.,

ஈர விறகுடனே இரவு பகல் எரிந்து,
முட்டை..க் கோப்பியுடன், மூன்று வேளை உண்வும்.,
சத்தாகச் சமைத்து அம்மா சலிப்பின்றிப் போட,
இன்ப துன்பம் என்று எதுவும் பாராமல்,
எம்மை உயர்த்தவென அப்பா உடல் நோக உழைக்க.,
ஆண்டு அனுபவித்து அன்று அலுக்காமல் வாழ்ந்து,
இன்று அதற்காக ஏங்கிடும் அழுக்கான வாழ்க்கை

கண்கள் திறந்து கனவுகள் கலைந்து விட,
ஏழரை மணியென்று "என் குளொக்" சொல்லிற்று.,
ஐயையோ இன்னும் அரைமணிக்குள் அங்கு,
நிற்காவிட்டால் எனக்கு நின்றுவிடும் வேலை.,

பசுமையான அந்தப் பழைய நினைவுகளை,
நினைத்துப் பார்க்கக் கூட எமக்கு நேரமில்லை இங்கு.,
மண்ணின் நினைவுகள் மனதினில் மரணிக்க,
மகிழ்வில்லா வாழ்க்கைக்காய் மற்றொரு நாள் தொடங்கிற்று...!





படிப்பகம்

www.padippakam.com




**யா**ழ்ப்பாணத்தில் "நல்லநேரம்" படம் பார்ப்பதற்கு முதல் நாளே சென்று பாய் விரித்து முதல் ஆளாய் வரிசையில் நின்ற காலம் போய், இந்தியாவில் திரைப் படம் வெளி வருவதற்கு முன்பே கனடாவில் படம் பார்க்கும் காலமிது. நாங்கள் கனடியர்களாகமாறிய போதும் எமது திரைக் கலாச்சாரத்தை மறக்கவில்லை. வாரம் 2 படம் விகிதம் மாதம் 8 படம் பார்க்கின்றோம். அப்படி யென்றால் கனடாவில் திரைப் படங்கள் தயாரிக்கப் படுவதில்லையா? கனடாவில் திரை யிடப்படும் ஆங்கிலப் படங்கள் எங்கிருந்து வருகின்றன?

**நா**ன் இங்கு வந்த புதிதில் ஆங்கிலப் படம் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் பார்த்த சில படங்கள் "காம்பேர்க்கர் கில்" (Humbunger Hill) "லாஸ்ட் எம்பரர்" புல்மெற்றல் ஜக்கட்" போன்ற படங்கள். இவை ஹாலிவூட் படங்கள் என்பது எனக்குத் தெரியும். "வெல்கம் டு கனடா" என்ற படத்தை 'பெஸ்ரிவல்ஒவ் பெஸ்ரிவலில்' பார்க்கக்கூடியதாக இருந்தது. இதுவே எனக்குத் தெரிந்த, நான் பார்த்த முதல் கனடிய திரைப்படம். ஆனால் நம்ப முடியாத ஓர் உண்மை. உலகில் தரமான திரைப் படங்கள் தயாரிக்கும் நாடுக ளில் கனடாவும் ஒன்று.

**மு**தல் கனடிய திரை ப்படம் 1897ல் மனிற்றோபா மாநிலத்தைச் சேர்ந்த விவ சாயியான James Freer என்பவரால் தயாரிக்கப் பட்டது. "Depicated Life on the Praires" என்ற இந்தப் படம் 1898-99 பகுதிகளில் கனடியன் பசுபிக் ரெயில்வே யினரால் இங்கிலாந்து முழு வதும் குடிவரவாளரை கவரும் நோக்கத்துடன் காட்டப்பட்டது.இது வெற்றி யளித்ததை தொடர்ந்து, 1902ம் ஆண்டு மீண்டும் இதே படம் இங்கிலாந்தில் திரையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து கனடிய பசுபிக் ரெயில்வே பிரித்தானிய படத் தயாரிப்பாளர்களை அழைத்து 'Bioscope of Canada' என்ற கம்பனியின் பெயரால்"Living Canada" என்ற படத்தை தயாரித்தது. இதனைத் தொடர்ந்து 1912 அளவில் பல படத் தயாரிப்பு நிறுவனங்கள் கனடா முழு வதும் ஆரம்பமாகின. "Evangeline" (1913), "The Battle of the long sault" (1913), The war Piegeon (1914) போன்ற படங்கள் வெளி வந்தன.

**மு**தலாம் உலகப் போர் நடைபெற்ற கால கட்டங்களில் வளர்ச்சி யடைந்த சனத்தொகை மேலும் கனடியப் படங்களின் வளர்ச்சியை அதிகரித்தன. அலன் தியேட்டர்ஸ் செயின், மற்றும் விநியோகக் கம்பனி கள் ஆரம்பமாகின. மோஷன் பிக்சர் புரோ (Motion Picture bureau) ஒன்று ஒன்ராறியோ மாநில அரசால் 1917லும், கனடிய அரசாங்கத்தால் 1923லும் ஆரம்பிக்கப்பட்டன.

1922ம் ஆண்டில் கனடிய திரைப் படங்கள் தயாரிக்கப்பட்டன. ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

இதே கால கட்டத்தில் ஹொலிவூட் படங்களின் ஆக்கிரமிப்பு உச்சக் கட்டத்தையடைந்தது. "அலன் தியேட்டர்ஸ் தொடர்ச் சங்கிலி" (Allen theatres chain) பேமஸ் பிளேயர்ஸ் (Famous Players) என்ற அமெரிக்கா நிறுவனத்தால் வாங்கப்பட்டது. இது மேலும் அதிகரித்தது. ஆனால் ஐரோப்பாவும் ஹாலிவூட் படங்களின் ஆக்கிரமிப்பால் பாதிப்புக்குள்ளானது. 1927ம் ஆண்டு 500,000 கனடிய டொலர் செலவிப் தயாரிக்கப்பட்ட "Carry on Sergeant" என்ற படம் பல விமர்சகர்களால் பாராட்டப் பட்ட போதிலும் சிலகிழமைகளில் தியேட்டரை விட்டு விலகியது. பிரிட்ஷ் கார்ட்டூனிஸ்ட்டும் எழுத்தாளருமான Bruce Bairnsfather என்பவரால் எழுதப்பட்ட கருவைக் கொண்ட இப் படத்தின் தோல்வி ஹொலிவூட் ஆக்கிரமிப்புக்கு நல்லதொரு உதாரணம்.

1930ம் ஆண்டளவில் பிரித்தானிய சட்டம் ஒன்று அமுலுக்கு வந்தது. இதன் பிரசுரம் கனடாவில் உள்ள திரை அரங்குகளில் ஒரு குறிப்பிட்டளவு கனடிய, பிரித்தானிய படங்கள் திரையிடப் படவேண்டும். எனினும் ஹாலிவூட் படங்களின் ஆக்கிரமிப்பை இதனால் தடுக்க முடியவில்லை. இது இன்று வரை ஒரு தொடர் கதையாகவே உள்ளது.

பிரெஞ்ச் நியுவேவ் அலை கனடிய திரையரங்குகளிலும் பாதிப்புக்குள்ளானது. புதிய தொழில் நுட்ப வளர்ச்சி என்பவற்றால் 1965–68 காலப் பகுதிகளில் குறைந்த செலவில் தரமான படங்கள் வெளிவந்தன. "Winter Kept Us warm" (1965), "Slow Run "(1968), "The Columbus of Sex "(1969), "The Plastic Mile Great Groups history" (1968) போன்ற படங்கள் இக்கால கட்டத்தில் வெளிவந்தன.

1967ம் ஆண்டு கனடிய மத்திய அரசாங்கம் கனடிய திரை அபிவிருத்தி கூட்டுத் ஸ்தாபனத்தை ஆரம்பித்தது. (Canadian Film Development Corporation (CFDC)). இது கனடிய திரைப்பட வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். பல திரைப்பட மாணவர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோர் இதனால் பயனடைந்தார்கள். 1973ல் மீண்டும் கோர்ட்டா முறை கனடிய தயாரிப்பாளர்கள், கனடிய அரசாங்கத்தை கேட்ட போதிலும் இது நடை முறைப் படுத்தப்படவில்லை. ஆனால் அரசாங்கம் வரி மற்றும் முதலீட்டு செலவு சலுகை என்பவற்றை தயாரிப்பாளர்களுக்கு வழங்கியது. "Lies My Father told me" (1975), "Why shoot the teacher" (1976), "Who has seen the wind" (1977) "The Brood "(1979) "Scaners" (1980), "The Grey Fox "(1982) "My American Cousin" (1985) "Loyalties "(1986), "Jeasus of Montreal" (1990), "Son and Me" (1991) போன்ற பல தரமான படங்கள் CFDC ஆல் வெளி வரத் தொடங்கின.

இதே சமயம் பல தரமான கனடிய, பிரெஞ்ச் படங்களும் வெளி வந்தன. "Le Pore Chopin" (1944),"Tit-Coq "(1953) "Le chat Dans Lesac" (1964). "St.Jerome "(1968) "Gina (1974) "Kamouraska" (1973) "Les Plouffe" (1981) "Anne Tnsteir "(1986) போன்ற எண்ணற்ற நல்ல திரைப் படங்கள் வெளிவந்தன.IQC எனப்படும் **Institute Qubecois Du Cinema** என்ற அமைப்பு பல நல்ல படங்கள் வெளி வர முதலீட்டு உதவி செய்தது.

கனடா பல நல்ல செய்திப் படங்களையும் (Documentary) உற்பத்தி செய்தது. 1970ம் ஆண்டு கனடிய திரைப்பட கூட்டுத் தாபனத்தால் "மாற்றத்திற்கான போட்டி" (Challange for Change) என்ற ஓர் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. இது கனடிய செய்திப் படங்கள் பலவற்றை உலகளவில் அறியச்செய்தது. இது அரசியல் சமூக மாற்றங்களுக்கான செய்திப் படங்களை தயாரிக்கத் தூண்டியது. செய்திப் படங்களுக்கு தொலைக்காட்சியின் வருகை ஓர் தடையாக இருந்த போதிலும் தரமான செய்திப் படங்கள் தொடர்ந்து வெளிவந்தன. 1985ம் ஆண்டு "Time is all You've got" என்ற செய்திப்படம் ஒஸ்காரின் சிறந்த செய்திப் படமாக தெரிவாகியது.

1920ம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக கனடா பல பரீட்சார்த்த படங்களையும் தயாரித்தது. இது உலகளவில் கனடாவிற்கு மேலும் அங்கீகாரத்



படிப்பகம்

www.padippakam.com

தையளித்தது. "Real Italian Pizza "(1971). "Canadian Pacific I "(1974) and II (1975) Foo's Gold (1981) போன்றவை குறிப்பிடத்தக்கவை. பெண்ணுரிமை சம்பந்தபட்ட Low Visibility (1984) மற்றுமோர் பரீட்சார்த்த படமாகும்.

கனடிய திரைப்பட விநியோகம் (வெளியிடும் படங்கள் உட்பட) இரு பெரிய திரைப்பட விநியோக நிறுவனங்களில் தங்கியுள்ளது. 'Famous Players', 'Cineplex Ordeon Corp என்பனவே அவையாகும்.

உலகில் திரைப் பட விழாக்கள் நடை பெறும் நாடுகளில் கனடாவும் குறிப் பிடத் தக்க ஒரு நாடாகும். 1960ல் மொன்றியல் நகரில் தான் முதல் விழா நடை பெற்றது. இதனைத் தொடர்ந்து1976ல் ரொறன்டோ நகரில் Festival of Festivals என்ற விழா ஆரம்பமாகியது. ஆனால் 1950ல் செய்திப் பட விழா Yorkton, Saskatchewan ல் ஆரம்பமாகியது. இன்று மொத்தம் 14 திரைப்பட விழாக்கள் கனடாவில் நடை பெறுகின்றன. Banff, International Student, Atlantic, Canadian International Animation, Quebec International Super 8, FIFA, Montreal International, World Film, IFONCV, போன்றன இதில் ரொறன்டோ நகரில் புரட்டாதி, ஐப்பசி காலப் பகுதிகளில் Canadian International animationம் Toronto Super 8 Film Festival ஆனி மாதத்திலும், Festival of Festivals புரட்டாதி மாதத்திலும், Video Culture கார்த்திகை மாதத்திலும் நடை பெறுகின்றன.

1991ம் ஆண்டு நடை பெற்ற ரொறன்டோ திரைப்பட விழாவில் "The Fisher King" (USA) சிறந்த படமாக தெரிவு செய்யப் பட்டது. 1992ல் "In The Name Of God "(கடவுளின் பெயரால்) என்ற இந்திய செய்திப் படம் சிறந்த செய்திப்படமாக தெரிவு செய்யப்பட்டது. ஆனந் பட்வர்த்தன் இதன் இயங்குனராவார். மொத்தம் 250-300 வரையிலான படங்கள் 45-50 வரையிலான நாடுகளில் இருந்து இந்த விழாவிற்கு வருடா வருடம் மொத்தம்.

1991ம் ஆண்டின் கனடிய சிறந்த நடிகராக ரஞ்சித் சௌத்திரி தெரிவு செய்யப்பட்டார். இவர் தீபா மேத்தாவின் Son and Me என்ற படத்தில் நடித்த மைக்காக இவ் விருதை பெற்றார். இப்படம் "தவைப்" திரைப்பட விழாவில் சிறப்பு விருது பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கனடாவில் CIDA, CRTC, NAC, NFBC போன்றன திரைப்படத் தயாரிப்பாளர்களை உளக்கு விக்கின்றன. முதலீட்டிற்கு உதவி செய்கின்றன. இதனை விட மாநில அரசு ஸ்தாபனங்களும் இதற்கான உதவியைச் செய்கின்றன. பல கல்வி நிறுவனங்கள் திரைப்படம் சம்பந்தப்பட்ட வகுப்புகளை நடாத்துகின்றன. யோர்க் பல்கலைக் கழகம், வெஸ்ரன்ஒன்ராறியோ, விப் பரட் போறியர், வின்சர், ரொறன்டோ, வோர்ட்லூா, ரைசர்ன், குயின்ஸ் போன்ற பல்கலைக் கழகங்களும், ஹம்பர் சமூகக் கல்லூரி, ஒன்ராறியே கலைக் கல்லூரி, நயகாரா சமூகக் கல்லூரி போன்ற வற்றிலும் திரைப் பட தொழில் நுட்ப படப் படிப்பினை மேற்கொள்ளலாம்.

The AMI Directory play back, cablecaster, broadcaster போன்ற சஞ்சிகைகளும் வெளி வருகின்றன. இதனை விட 1516 Danfort Aveல் அமைந்துள்ள Hollywood Carteen, 350 Queen St Castல் அமைந்துள்ள J.S Bookland 256 குயின்ஸ் மேற்கில் அமைந்துள்ள Pages books ஆகிய கடைகளில் இவை சம்பந்தப்பட்ட புத்தகங்களையும் பெற்றுக் கொள்ளலாம். இத்தகைய நாடொன்றில் இவ்வளவு வசதிகளா? இவ்வளவு இருந்தும் இதனை பயன் படுத்த எவரும் வராமை (தமிழர்கள்) கவலைக் குரியதாகும். இவற்றைப் பயன்படுத்தி நாம் எம்மை வளர்க்க வேண்டும். இல்லையேல் தொடர்ந்து 3ந் தர இந்திய படங்களுக்கு எம்மவர் வரிசையில் நிற்பது தவிர்க்க முடியாததாகும்.






படிப்பகம்

www.padippakam.com

தமிழர் நிர்வாகத்தில்

# புதிய, பாவித்த கார்கள் விற்பனை

## Quality Used And New Car Sales



உடனே தொடர்பு கொள்ளுங்கள்

## AUTO THAVAS

2946 Eglinton Ave. East
Scarborough, Ontario
M1J 2E7


தொலைபேசி BUS:(416) 439-8618 RES:(416) 438-4250

உரிமையாளர் திரு. P. தவராஜா

# உங்கள் நகைத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

கனடாவில் முதல்தரமான தங்க நகை வியாபாரிகள்

## LALITHA JEWELLERY LTD



2475 Eglinton Ave. East
Scarborough, Ont.
M1K 5G8

தொலைபேசி:

**(416)757-6568**



படிப்பகம்

www.padippakam.com

# கேட்டறிந்தோம்

## “இலக்கியம் முதலில் இலக்கியமாக இருக்க வேண்டும்”

**சித்திரலேகா மௌனகுரு**

**யாழ்ப்பாண பல்கலைக் கழகத்து மொழியியல் துறை விரிவுரையாளரான மௌ. சித்திரலேகா இலங்கையில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும் கனடிய அரசுசார்பற்ற நிறுவனங்களின் மகாநாட்டில் கலந்து கொள்ள அண்மையில் கனடா வந்திருந்தார். “புன்னகை மலரு”க்காக அவரைச் சந்திப்பவர்**

**-ரதன்**



**கேள்வி:–** “அன்னையர் முன்னனி” பற்றி......?

**சித்திரலேகா:–** 1984ம் ஆண்டு ஆவணி மாதம் இலங்கையின் வட பகுதியில் இராணுவ அடக்கு முறை உச்சக் கட்டத்திலிருந்த போது, ஆண்கள் வெளியே வந்து கருத்து தெரிவிக்க பல்வே இடையூறுகள் இருந்தபோது, ஏதோ ஒரு வகையில் சமூகத்தில் இந்த உணர்வு வெளிக் கொணர வேண்டும் என்ற தேவை இருந்தது. எனவே பெண்களுக்கு குறிப்பாக தாய் என்ற பாத்திரம் பயன்பட்டது. தென், லத்தீன் அமெரிக்க நாடுகள் இதற்கு முன்னுதாரணமாக இருந்தன. யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற முதலாவது ஊர்வலத்தில் 2000 பெண்கள் பங்குபற்றினர். 84, 85, 86 ம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ்ப்பாணத்தை விட்டுவெளி மகாணங்களிலும் இதன் நட வடிக்கைகள் இடம் பெற்றன. உதாரணமாக கொக்கட்டிச் சோலை படு கொலைகளுக் கெதிராக...... கரையோரச் சட்டம் காரணமாக பலர் வேலையிழந்த போது பெண்கள் சுயவேலை வாய்ப்பு வழங்கும் திட்டம், மற்றும் இடம் பெயர்வோருக்கான உதவிகள் என்பனவற்றில் சிறியளவிலும் பங்குபற்றின. எனினும் 87ல் இது செயலிழந்து விட்டது. முக்கியமான அங்கத்தவர்கள் பலர் இராணுவ நட வடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து விட்டனர். மீண்டும் புனரமைக்க முற் பட்டபோதும் இது அரசியல் குழுக்களைச் சாராத அமைப் புக்களுக்கு கடினமாக இருந்தது. இன் வகையில் “அன்னையர் முன்னனி”யும் செயலிழந்து விட்டது.

**கேள்வி:–** “அன்னையர் முன்னனி” கலைக்கப்படுவதற்கு இராணுவ அமைப்புக்கள் காரணமாக இருந்தனவா?

**சித்திரலேகா:–** அது உடன டிக் காரணமாக இருந்த போதும், அரசியல் குழுக்கள் சாராத சுயாதீனமான அமைப்புக்கள் இயங்க முடியாதிருந்தது. இது ஒரு பொதுப் பிரச்சினையாக இருந்தது.

**கேள்வி:–** இன்றைய போராட்டங்களின் விளைவாக, பெண் விடுதலை சம்பந்தமான சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?

**சித்திரலேகா:–** குறிப்பாக 70ம் ஆண்டுகளில் பெண் விடுதலை என்ற கருத்து முன்னுக்கு வந்தது. இதற்கு சர்வதேச ரீதியாக ஏற்பட்ட பெண்விடுதலை சம்பந்தப் பட்ட கருத்து மறுமலர்ச்சியும் ஒரு காரணம். 75ம் ஆண்டு சர்வதேச பெண்கள் ஆண்டும் இதனைத் தொடர்ந்து பல அரசு சாாப்பற்ற நிறுவனங்கள்



படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் சம்பந்தப்பட்ட செயற் திட்டங்களை முன் வைத்தன. இதே காலப் பகுதியில் தமிழர்கள் மத்தி யிலும் இக்கருத்து நிலவியது. 80களில் தேசிய விடுதலை இயக்கத்தின் பின்னால் இக் கருத்து பிரபலமாகியது. இயக்கரீதியாகவும், சுயமாகவும் பல அமைப்புக்கள் தோன்றின.

**பெண் விடுதலை என்றால் என்ன?**

**முதலில்** ஆண்களுடன் சேர்ந்து பெண்கள் கல்வி கற்பது, தொழில் பார்ப்பது அத்துடன் சட்டரீதியாக சமத்துவம் போன்ற கருத் துக்களே நிலவின.

**அடுத்து** சமூக பிற் போக்குகளால் தான் பெண்கள் முன் வரமுடியாமல் உள்ளது. எனவே தேசிய விடுதலைப் போரை வென் றெடுப்பதன் மூலம் பெண்கள் முன்னுக்கு வரலாம்.

**மூன்றவதாக** பெண் விடுதலை ஓர் நீண்ட காலப் போராட்டம். பெண்களுக் கெதிரான ஒடுக்கு முறை அமைப்பு ரீதியாக செயற்பட்டு வருகிறது. குறிப்பாக கருத்து அமைவு ரீதியாக பெண்களுக்கு சுய நீர்ணய உரிமை இல்லை. வாழ்க் கையை தீர்மானிக்கும் அதிகாரத்தை இழந்துள்ளா ர்கள். இது ஆண்களால் ஆண்கள் வழி நடத்தும் சமூகத்தில் ஆண் நிலை மனோப் பாவங்களால், விழுமியங்களால் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

சமூகத்தால், சமூக த்தின் அரசால், குடும்பத்தால் அவளுக்கு கட்டுப் பாடுகள் உள்ளன. கடந்த 10 வருடங் களில் இதில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வட பகுதியில் வீதியில் பெண்கள் பிரசந்தம் செய்கிறார்கள். இதன் காரணமாக பெண்கள் முன்னேறி விட்டார்கள் என்ற கருத்துநிலவுகிறது. ஆனால் எனக்கு ஓர் சந்தேகம்.......

இந்த மாறுதல் போரினால், போரின் நிர்ப்பந் தத்தால் ஏற்பட்டது. தேசிய விடுதலைப் போரின் வெற்றியின் பின்னரோ அல்லது ஓர் அரசியல் தீர்வின் பின்னரோ, மீண்டும் ஓர் நிர்ப்பந்த மில்லாத சமூகத்தினுள் செல்லும் போது இவர்கள் மரபு ரீதியான பாத்திரத்திற்கு தள்ளப்படுவார்கள். இதற்கு உதாரணமாக தேசிய விடு தலைப் போரில் வெற்றி கொண்ட பல நாடுகளை கூறலாம்.

**கேள்வி:-** சுயநிர்ண உரிமை என்பதை விளக்கமாக......

**சித்திரலேகா:-** .ஒரு தேசம், இடம், இறைமை போன்று.. ஒரு பெண் தன்னுடைய பால் நிலை பெண் என்பதால் அவளுக்கு கற்பிக்கப்பட்டு ள்ளன. நடை முறையான எண்ணங்கள் விழுமியங்கள் கருத்துப் போக்கு இவற் றினால் கட்டுப்படாமல் ஒரு மனித ஜீவி என்ற நிலையில் தன்னுடைய மனித வாழ்வை தீர்மானிக்கும் உரிமை.

**கேள்வி:-** இன்றைய சமூக அமைப்பு மாறாமல் இன் றைய நிலையில் பெண் விடுதலை சாத்தியமாகுமா?

**சித்திரலேகா:-**நான் உங்க ளது கருத்துடனேயே உள்ளேன். ஆனால் முதலாளித்துவம் + ஆணா திக்கம், தந்தைவழி என்ற அமைப்பு மாற வேண்டும். இது ஒரு நீண்ட போராட்டம். சிலர் கூறுவர் தனிச் சொத்துடைமை காரணமாகத் தான் பெண்கள் ஒடுக்கப்பட்டுள்ளார்கள் என. ஏன் லெனினும், எங்சயனும் கூறினார்கள் பெண்கள் உற்பத்தியில் பங்கு பெற வேண்டும் என. இன்று அது நிகழ்கிறது.

**கேள்வி:-** இன்றைய பெண் விடுதலை அமைப்புக்கள் சமூகமாற்றத்தை நோக்கி இயங்க வேண்டுமா? அல்லது அவ்வாறு இயங்கும் அமைப் புக்களுடன் இணைந்து இயங்க வேண்டுமா?

**சித்திரலேகா:-** முதல் கேள்வியிலே விடை உள்ளது. இரண்டிலும் சமாந்திரமாக இயக்க வேண்டும்.

**கேள்வி:-** தற்சமயம் இலங்கையில் இயங்கும் பெண்விடுதலை அமைப்புகள் பற்றி?

**சித்திரலேகா:-** கடந்த 5 வருடங்களைப் போல் இப்போது இல்லை. ஆனால் பெண்களுக்கெதிரான வன் முறைகள் இப்போதும் உண்டு. தற்போதைய அர சியல் சிக்கல் இதற்கு ஓர் காரணம். பல பெண்கள் மனித உரிமை ஸ்தாபன ங்களில் வேலைசெய்கின் றார்கள். ஆனால் அரசியல் அமைப்பைச் சார்ந்த பெண் விடுதலை அமைப்புக்கள் உண்டு.

**கேள்வி:-** கனடாவில் தற் சமயம் நடைபெறும் பெண் களுக் கெதிரான வன் முறைகள் பற்றி.....



படிப்பகம்

www.padippakam.com

**சித்திரலேகா:–** குறிப்பாக கீழைத் தேச நாடுகளில் இருந்து புலம் பெயர்வோர் பெண்கள் பல விஷயங்களில் முன் தள்ளப்படுகிறார்கள். பெண்கள் கட்டாயமாக வேலைசெய்ய வேண்டியுள்ளது. அடுத்து எம்முடன் இங்கு எமது கலாச்சாரம், பண்பாடு என்பனவும் புலம் பெயர்ந்துள்ளது. இவற்றில் பல பிற்போக்குத் தனங்கள் உண்டு. சாதி, பெயர்கள் வாழ்நிலை என்பன. இங்கு பெண்கள் முன்னேற்றத்தில் ஆண்களுக்கு அங்கலாய்ப்பு உண்டு. அதாவது அதிகாரம் இல்லாமல்போகிறது. இதுவே பிரதான காரணம். இதற்கு Mediaம் ஓர் காரணம்.

**கேள்வி:–** இலக்கிய வாதி என்ற முறையில் கலை, கலைக்காக, மக்களுக்காக என்ற கோஷம் பற்றி......

**சித்திரலேகா:–** இது ஆகவும் இலக்கியத்தை துருவ நிலைப் படுத்துகிறது. இலக்கியம் முதலில் இலக்கியமாக இருக்க வேண்டும். இங்கு நான் கூறுவது ஓர் பண்பு.

உ+ம் சுவரொட்டிக்கும், கவிதைக்கும் உள்ள வித்தியாசம். தமிழ், இலக்கியம் சில சமயங்களில் பிழைத்தமைக்கு காரணம். இந்த துருவ நிலைப்படுத்தலே. கலைவாதி எனக் கூறி சமூகத்தை கைவிடுவது. இவை இரண்டுக்கு மிடையில் ஓர் இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

**கேள்வி:–** ஒரு கலைஞன் குறிப்பிட்ட தளத்தில் நின்று இயக்க வேண்டுமா? அல்லது சுதந்திரமாக இயங்க வேண்டுமா?

**சித்திரலேகா:–** அது அந்தப் படைப்பாளியின் சொந்த விருப்பம், சொந்தச் சூழல் என்பவற்றைப் பொறுத்தது.

**கேள்வி:–** ஒரு படைப்பில் உருவம் மட்டும் இருந்து உள்ளடக்கம் இல்லாவிடில்.

**சித்திரலேகா:–** இது இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. பின்னிப் பிணைந்துள்ளது.

**கேள்வி:–** புதுக் கவிதையில் உள்ளடக்கம் உண்டு உருவம் இல்லை என்று நிலவும் கருத்து பற்றி.

**சித்திரலேகா:–** இதில் பல வகை உண்டு. யாப்பிலாத கவிதை என்றால் – நவீன கவிதை இயக்கத்தில் – சேரன், ஜெயபாலன், செழியன் போன்றபலர் எழுதியுள்ளார்கள். இவை கவித்துவமானவை. நிராகரிக்க முடியாதவை.

**கேள்வி:–** இங்கு பல சிற்றேடுகள் வருகின்றன அவை பற்றி.....?

**சித்திரலேகா:–** இவை பற்றி மதிப்பீடு செய்ய இன்னும் காலம் வரவில்லை. ஆனால் **நான்காவது பரிமாணம், பொதிகை** என்பன ஒரு பரந்தளவு வாசகர் மட்டத்திலும், **காலம்** கலைப் பிரங்ஞையுடையவர் மத்தியிலும் **தேடல்** கலை, அரசியல் சமுக விடயங்கள் உள்ளடக்கியவர்கள் மத்தியிலும் செல்வதாக வருகிறது.

**கேள்வி:–** புலம் பெயர்ந்தோர் படைப்புகளில் என்ன விடயங்களை கூடுதலாக வெளிக் கொணர வேண்டும்?

**சித்திரலேகா:–** புலம் பெயர்ந்த இடங்களில் புதுவகையான அநுபவங்களைப் பெறுகிறார்கள். இது பல்வேறு வகையான பரிமாணங்களை ஏற்படுத்துகிறது, இந்த நிலமை சிறைப் பிடிக்கப்பட வேண்டும். இனவாதம் பற்றிய கருத்துக்கள், பெண்கள் சம்பந்தப்பட்ட உளவியல் ரீதியான கருத்துக்கள் போன்றன....

**கேள்வி:–** Living together என்பது பற்றி?

**சித்திரலேகா:–** திருமணம், குடும்ப உறவு என்பன பெண்களை ஒடுக்குவதற்கு பயன்படுகிறது. திருமணம் ஆண் பெண்களுக்கிடையில் அசமத்துவம் உண்டு. இதை திருமணம் நிறுவமையப் படுத்துகிறது. எனவே திருமணம் என்ற முறையும் சடங்குகள் அனைத்தையும் நிராகரிக்கின்றேன்.

## வளையல்

*தங்க*
*வளையலைக்*
*கழற்றி*
*போராளியின்*
*கையில்*
*கொடுத்து*
*"உங்களில்*
*பலருக்கு*
*கைகளே இல்லை*
*எனக்கெதுக்கு*
*வளையல்" என்றாள்''*

காசி ஆனந்தன்



படிப்பகம்


www.padippakam.com


# UNICAIR


## HEATING & AIR CONDITIONING LTD.

உங்கள் பாவனையிலுள்ள

- ❖ HEAT PUMPS
- ❖ KOOL FIRE'S
- ❖ FURNACES (GAS, OIL & ELECTRIC)
- ❖ HUMIDIFIERS, DEHUMIDIFIERS
- ❖ REFRIGERATORS, DEEP FREEZERS,
- ❖ COOLERS (BOTTLE & WATER)




**அத்துடன் ஏனைய வீட்டு உபகரணங்கள்**
என்பனவற்றின் திருத்த வேலைகளைச்
செய்து கொள்வதற்கும், அவற்றை
நல்ல நிலையில் தொடர்ந்து
பேணுவதற்கும் நீங்கள் என்றும்
நாடவேண்டியது **UNICAIR**



**FREE ESTIMATE**

**UNICAIR Heating & Air Conditioning Ltd**

**100 Melford Drive Unit -23**
**Scarborough, Ontario**
**M1B 2J4**

**Phone:- 470-8157 Fax:- 297-5859**
**297-9957**

**Metro Licence No: H1256**




படிப்பகம்

www.padippakam.com

# ருக்கு...

தமிழகத்திலிருந்து ஒரு சிறுகதை...

- வண்ணநிலவன்

ருக்கு அக்காவுக்கு முகத்தில் மட்டும் வைசூரித் தளும்பு இல்லாமல் இருந்திருந்தால் ருக்கு அக்கா அழகாக இருந்திருப்பாளா என்று சொல்ல முடியாது. ருக்கு அக்காவுக்கு கருப்புத் தோலில் பளபளவென்று வைசூரித் தளும்பு முகமெல்லாம் இருக்கும். ருக்கு அக்காவைப் பற்றின ஞாபகம் வரும் போதெல்லாம் இந்தத் தளும்பு தான் முதலில் ஞாபகத்துக்கு வரும். நமக்கே வைசூரி கண்டு இப்படி முகமெல்லாம் தளும்பாக ஆனால் நன்றாக இருக்குமே என்று அப்புறம் பல தடவை ஆசைப் பட்டிருக்கிறேன்.

இத்தனைக்கும் இன்று வரை ருக்கு அக்காவை முதலும் கடைசியுமாகப் பார்த்தது ஒரே ஒரு தடவை தான். அதுவும் ஒரே ஒரு நாள் மட்டும் தான்.

ரொம்ப காலத்துக்கு முன்னால் நடந்த விஷயம் ஆனாலும் என்றைக்கு நினைத்துப் பார்த்தாலும் நேற்று தான் நடந்து முடிந்தது மாதிரி இருக்கிற பசுமையான ஞாபகங்கள்.

தாழையூத்து பெரியப்பா இப்போது தாழையூத்தை விட்டு கிராமத்தில் குடியேறி விட்டார்கள். என்றாலும் தாழையூத்து பெரியப்பா ஒரு காலத்தில் அங்கே இருந்த தன் காரணமாக அந்த ஊர் பெயரைப் பிரிக்க முடியாத படிக்கு பெரியப்பாவோடு ஒட்டிக் கொண்டது. தாழையூத்து பெரியப்பாவுக்கு இரண்டு தாரம். மூத்த தாரத்துடைய ஒரே பெண் தான் ருக்கு அக்கா. ருக்கு அக்காவின் ஐந்தாவதோ, ஆறாவதோ வயசில் பெரியம்மா இறந்து போய் விட்டாள். சாவுக்கு என்ன பெரிய காரணம் வேண்டும்? ஏதோவொரு அவசர நோய் வந்ததென்றும் இரண்டே நாளில் செத்துப் போனாளென்றும் ஆச்சி தான் ஒரு கதையை விவரிப்பாள். அப்புறம் தான் இப்போது இருக்கிற பெரியம்மா வந்தாள். இப்போது இந்தப் பெரியம்மாவுக்கும் சரவணன், முருகன், நெல்லையப்பன், பாப்பா என்று நான்கு பிள்ளைகள்.

செத்துப்போன பெரியம்மாவையும், ருக்கு அக்காளை அவள் நிராதரவாக விட்டு விட்டுச் செத்துப்போன சோகத்தையும் ராத்திரி வேளைகளில் எல்லோரும் சாப்பிட்டு விட்டு படுக்கையில் படுத்துக் கிடக்கும் போது ஆச்சி மட்டும் படுக்கையில் உட்கார்ந்து கொண்டு சொல்ல ஆரம்பிப்பாள். அந்தச் சூழ்நிலை ஆச்சிக் கென்று ஒரு துயரம் கப்பிய குரலை வழங்கியிருக்கும். அந்த அபூர்வமான குரலில் ருக்கு அக்காவின் அம்மா கதையை பல நாட்கள் சொல்லியிருக்கிறாள். ஒரு நாள்கூட அந்தக் கதை அலுப்பைத் தந்தது கிடையாது. எல்லாமே ஏற்கெனவே கேட்ட பழைய விஷயங்கள் தான். ஆனால் ஒவ்வொரு நாளும் கதை கேட்கும் போதும் ஒவ்வொரு மாதிரியாக அந்தக் கதையை ஆரம்பித்துச் சொல்லுவாள் ஆச்சி.

இதுவே ருக்கு அக்காளை பாராமலே எனக்கு ருக்கு அக்காளின் பேரில் ஒரு பிரியத்தை ஏற்படுத்தி வைத்திருந்தது. அந்தக் கதையை யார் கேட்டாலும் ருக்கு அக்காவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்படாமல் போகாது.

ஒரு நாள் ஆச்சி, “ருக்கு சமைஞ்சிட்டா நாம எல்லாரும் அவ சடங்குக்குப் போறோம்” என்று சொன்னாள். சமைஞ்சு போகிறது, சடங்கு பற்றி யெல்லாம் எனக்கு அப்போது ஒன்றுமே தெரியாது. அதெல்லாம் கல்யாணம்



படிப்பகம்

www.padippakam.com

மாதிரி ஒரு விசேஷம் என்று மட்டும் தெரியும். ருக்கு அக்காவை இதையொட்டிப் பார்க்கப் போகிறோம் என்பதே எனக்குப் போதுமானதாக இருந்தது. சடங்குக்குப் போக இன்னும் எத்தனையோ நாட்கள் இருந்தது. ஆச்சி முன்னதாகவே விளம்பரப் படுத்தி விட்டதால் அந்த நாள் முதலாய் வீட்டில் யாருக்கும் நாளே ஓட வில்லை. ஆனால் ராத்திரி படுக்கப் போகும் போது மட்டும் வீட்டில் ஒரு சொல்ல முடியாத குதூகலம் வந்து விடும். "அப்பாடா ஒரு நாள் கழிஞ்சிது" என்று சந்தோஷ மாக இருக்கும். சடங்குக்கு நாள் வைத்தது முதல் உலக இயக்கமே நின்று விட்டது போல இருந்தது.

சடங்கு நாளும் வந்தது. சடங்குக்கு முதல் நாள் எல்லோரும் ரயிலில் புறப்பட்டோம். நாங்கள் போகிறதுக்கு முன்னாலேயே நிறையப்பேர் வந்திருந்தார்கள். "ரயில் கெடி" யிலிருந்து இறங்கி வருகிற போதே கேட்ட றக்கார்டு சத்தமும் தூரத்தில் தெரிந்த பந்தலும் அளவிட முடியாத சந்தோஷத்தைத் தந்தது. நானும் பெரிய தங்கச்சியும் யார் முதலில் பந்தல் காலைப் போய்த் தொடுகிறது என்று பந்தயம் போட்டுக் கொண்டு ஓடினோம். அங்கே போனதும் தான் எல்லோரோடும் கூட வந்திருக்கலாமோ வென்று தோன்றியது. பந்தலில் இருந்த பெரியவர்கள் எல்லோரும் எங்கள் இரண்டு பேரையுமே பார்த்து, 'ஏல ஆச்சி, தாத்தா, அப்பா வெல்லாம் எங்கடா' என்று விசாரிக்க ஆரம்பித் தார்கள். திடீரென்று யாரோ என்னைக் கவனிக்கிற உள்ளுணர்வு உண்டாயிற்று. தலையைத் திருப்பிப் பக்கத் தில் தெரிந்த ஜன்னலைப் பார்த்தேன். கருகரு வென்று முகமெல்லாம் வைசூரி தளும்புடன் கூடிய ஒரு முகம் ஜன்னல் கம்பிகளி னூடே தெரிந்தது. அத்தனை பேருக்கும், சந்தடிக்கும் நடுவே எனக்கு மட்டுமே கேட்கிற குரலில், "ராமையா வா...." என்று கேட்டாள். என்னுடைய பதிலே வேண்டாம் போல சும்மா ஒரு பேச்சுக்குக் கேட்டது போல என்னை உள்ளே வரும்படி கையைக் காட்டினாள்.

தயங்கித் தயங்கிப் போய் அவள் இருந்த அறையின் வாசல் படிக்கு வெளியே நின்று கொண்டி ருந்தேன். அந்த அறை கொஞ்சம் இருட்டாக இருந்தது. வெளியே போட்டி ருந்த பந்தலில் இருட்டு அந்த அறைக்குள்ளும், வீட்டுக்குள்ளும் குவிந்து கிடந்தது, பார்க்க அழகாக இருந்தது. காய்கறிகள் குவித்து வைக்கப்பட்டிரு ந்தன. பச்சைக் காய்கறிகளின் மணம் அந்த இருட்டுக் குள்ளிருந்து வீசியது. ருக்கு அக்கா உள்ளே நின்றபடி தன் கைகளை மட்டும் நீட்டி குழக்கென்று என்னை உள்ளே இழுத்து மார்போடு மார்பாய் ஆவிச்சேர்த்து கட்டிக் கொண்டாள். முத்தம் கொடுத்தாள். இவ்வளவு நெருக்கமாக யாரும் என் னைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டதை நான் கண்டதில்லை. வெட்கமாக இருந்தது. அவளுடைய வைசூரித் தளும்புகள் நிறை ந்த முகத்தை என்னுடைய கன்னத்தோடு கன்னமாகச் சேர்த்து வைத்துக் கொண்டு பேசினாள். அந்தத் தளும்புகளின் மேடு பள்ளங்கள் சொல்ல முடியாத மென்மை யுடன் இருந்தன.

"ராமையா நீ அக்காவை இதுக்கும் முன்னே பாத்திருக்கியா?"

நான் பதிலே பேசவில்லை.

"நீ அக்காவத் தேடுனீயா?"

"..............."

"சொல்லுப்பா .... சேய் நீ அக்காவத் தேடுனீயா?"

எனக்கு ஒன்றுமே சொல்லத் தெரியவில்லை.

அம்மாகூட இவ்வளவு பிரியமாக இருந்ததில்லை.

பிரயாணக் களைப்பு எல்லோரும் வெந்நீரில் குளித் தோம். என்னை ருக்கு அக்கா தான் குளிப்பாட்டி னாள். சட்டையைக் கழற்றும் போதே ஒரு மாதிரியான கூச்சம் உடம்பெல்லாம் பரவிற்று. அப்புறம் அவளே டிரவுசர் பித்தான்களைக் கழற்ற ஆரம்பித்ததும், கழற்றுவதைத் தடுக்கவும் முடியாமல் கழற்றவிடவும் முடியாமல் தயங்கித் தயங்கி அவளுடைய கைகளைப்



படிப்பகம்

www.padippakam.com

பிடித்துக் கொண்டேன். அக்காவே கழற்ற வேண்டும் போலவும், கழற்ற வேண்டாம் போலவும் இருந்தது. அக்கா சிரித்துக் கொண்டே, "ஏடே பெரிய மனுஷன் மாதிரி தான் ரொம்ப வெக்கப்படுதாரு. சும்மா தொறையும். அக்கா தான்" என்றாள். கூச்சப்பட்டுக் கொண்டேதான் குளித்தேன். அம்மாவைப் போலவே கூச்சமே இல்லாமல் என்னிடம் பேசிக் கொண்டே எல்லா இடங்களிலும் சோப்புப் போட்டாள். தலையைத் துவட்டி டிரவுசர் சட்டை மாட்டிவிட்டாள்.

மத்தியானம் அக்காவும் வேறு சில பெண் பிள்ளைகளும் சேர்ந்து "கழச்சி" விளையாடினார்கள். என்னைப் பக்கத்திலேயே உட்கார்த்தி வைத்துக் கொண்டாள். அன்றைக்கு பூராவும் என்னைக் கூட்டிக் கொண்டே அலைந்தாள். சாயந்தரம் என்னை ஆக்குப் பறைக்கே கூட்டிக் கொண்டு போய் தவசுப் பிள்ளையிடம் சொல்லி காபி வாங்கிக் கொடுத்தாள். அப்பாவுக்கு ரசா இல்லையென்று மறுநாளே கிளம்பி விட்டோம். எனக்கு இன்னும் ஒரு பத்து நாள் இருக்க வேண்டும் போல ஆசையாக இருந்தது. "ராமையாவும் லெட்சுமியும் இங்க கொஞ்ச நாள் நிக்கட்டுமே, சித்தப்பா.... இவுக பள்ளிக்கூடத்துக்குப் போமி என்ன ஆகப் போகுது?"என்று அப்பாவிடம் ருக்கு அக்கா கேட்டாள்.

அப்பா வழக்கம் போல மறுத்து, கூட்டிக் கொண்டு வந்து விட்டார். அன்றைக்கு பார்த்தது தான் ருக்கு அக்காவை. அதற்கப்புறம் பார்க்கவே இல்லை. மொத்தத்தில் அக்காவோடு பழகினது இரண்டே நாள் தான். சடங்கு முடிந்த மறுவருஷமே ஒரு நாள் ருக்கு அக்காவுக்கு இழுப்பு வந்து செத்துப் போனதாக தந்தி வந்தது. ஆச்சியும், தாத்தாவும் மட்டும் துஷ்டிக்குப் போனார்கள். ஆச்சி "வயிறு வயிறு" என்று அடித்துக் கொண்டு போனாள்.

ஆச்சி அவளுடைய சாவுக்குப் போய் விட்டு ஒரு வாரம் கழித்து திரும்பி வந்தாள். இப்போது ஆச்சிக்கு இன்னொரு கதை கிடைத்து விட்டது. பெரியம்மாவுடைய கதையோடு ருக்கு அக்காவுடைய கதையையும் சேர்த்துச் சொல்ல ஆரம்பித்தாள். தினமும் ஒவ்வொரு விதமான இதே கதையைத் தான் சொன்னாள். ஒருத்தருக்கும் அலுப்பு தட்டாத கதை இல்லையா அது?

✺✺✺✺✺

எனக்குப் பெண் பார்த்தார்கள். என் அத்தை மகளான செல்லம்மாளுக்கு வைசூரித் தழும்பு இருக்கிறதென்று சொல்லி எல்லோரும் ஒதுக்கிறார்கள். நான் வலுக்கட்டாயமாக செல்லம்மாளைத் தான் கட்டுவேன் என்று சாதித்து விட்டேன்.

✺✺✺✺✺

## செ.யோகநாதன்



அறுபதுகளில் எழுத ஆரம்பித்த ஈழத்து எழுத்தாளரான செ.யோகநாதன் தனது படைப்புக்களால் பல்லாயிரக்கணக்கான வாசகர்களைக் கவர்ந்தவர். இலங்கை நிர்வாக சேவையில் பிரவேசித்து உதவி அரசாங்க அதிபர் பதிவியுட்பட பல்வேறு பதவிகளை வகித்த இவர் தற்போது தமிழகத்தில் தங்கியிருந்து தனது எழுத்துப் பணியை தொடருகின்றார். ஈழத்தவராகிய நாங்கள் பெருமை கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் செ.யோகநாதன் தற்போது தமிழகத்து ஜனரஞ்சக எழுத்தாளர் வரிசையில் ஒருவராக பிரகாசித்து வருகின்றார். அங்கு நடக்கின்ற எந்த இலக்கியக் கூட்டங்களிலும் இவர் முக்கிய பேச்சாளராக அழைக்கப்பட்டு வருகின்றார். இவரது நூல்களை வெளியிடுவதில் தமிழகத்தில் உள்ள வெளியீட்டாளர்கள் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொள்கின்றார்களாம். இவ்வாறான சிறப்புக்கள் பொருந்திய செ. யோகநாதனது சிறந்த சிறுகதையொன்று "புன்னகை மலர்" நவம்பர் மாத இதழில் பிரசுரமாகின்றது. (ஆ+ர்)



படிப்பகம்

www.padippakam.com


ஸ்காபுரோ நகரில்

# ஒரு நவீன உணவகம்


தமிழ்மக்களின் பாரம்பரிய உணவுவகைகள்
மற்றும் குளிர்பான வகைகள்

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# BLUE ★ STAR



1877 Lawrence Ave East
Scarborough. Ontario
M1R 2Y3



**Tel: (416) 288-0303**

L.C.B.O அனுமதியோடு மதுபான விற்பனையும் நடைபெறுகிறது.



# சங்கர் அச்சகம்

யாழ்நகரில் பிரபல்யமான விவேகானந்தா அச்சகத்தாரின்
அச்சுச்சேவை இங்கும் தொடர்கிறது.

- உயர்ந்த தரம்
- குறைந்த செலவு
- குறித்த தவணை


குறுகிய காலத்தில் தமிழ்மக்களின் அமோக
ஆதரவைப் பெற்றவர்கள்

# சங்கர் அச்சகம்

3150 Eglinton Ave East Unit-4
Scarborough, Ontario
M1J 2H2

**Tel: (416) 264-2715 Fax: (416) 264-5595**

www.padippakam.com



# சிறகு இரண்டு வேண்டும்

கண்ணாடி சிமினிக்குள் சின்ன தீபத்தை
சிறை வைத்தது யார்?
ஆயுத விதைகளை என் தேச விளைநிலத்தில்
தூவியவர் யார்?
சிறுவர்களுக்கு அறுவடை செய்யும் முறையை
கற்றுக் கொடுத்தவர் யார்?
குமிறி எழும் நீலக்கடலில்
குருதியைக் கலந்து
அதனை சிவப்பாக்கியது யார்?

சடலங்கள் மீது நடைபயிலும் பூட்சுகள்
தொலைந்து போகும்படி
தயவு செய்து கட்டளையிடுங்கள்

எங்கே அந்த சமாதான பறவைகள்
மௌன இரவில் மயானமாக்கப்பட்ட
என் தேசத்தின்
எல்லைவரை பறந்து சென்று
துயில் கொள்கின்றனவோ?
அல்லது
அழுகிப் போன உடல்களின்
துர்நாற்றத்தில்
மயங்கிப் போய்விட்டனவோ?


குமுறும் நெஞ்சத்தீயை அணைக்க
என் தேசத்து எல்லைவரை செல்ல
எனக்கு
சிறகிரண்டு வேண்டும்.

**ஜி. மொனிக்கா**



படிப்பகம்

www.padippakam.com



# என் பேனாவின் பிரசவங்கள்

நிலா குகதாசன்

இந்த உலகிலே மொத்தமாய் எத்தனை வார்த்தைகள் இருந்தாலும் தாய்மை என்கிற இந்த வார்த்தைக்கு என் வரையில் ஒரு தனி மரியாதை இருக்கிறது. காலகாலமாக இந்த வார்த்தை கடவுளுக்கு ஒப்பாக உவமிக்கப் பட்டிருக்கிறது........

அதனால் தான் மனிதன் மண்ணையும், விண்ணையும் மட்டுமல்ல, இயற்கையின் ஒவ்வொரு அசைவிற்கும், இயக்க த்திற்கும் தாய்மையை இணைத்து மகிழ்ந்தி ருக்கிறான்....

அதுசரி, தாய்மைக்கும், புன்னகைக்கும் சம்பந்தம் இருக்கிறதா?..... ஆமாம், தாய்மையின் புன்னகையில் தான் இந்த உலகமே புன்னகைக்க ஆரம்பிக்கிறது..

தாய்மையின் சின்ன மாய் மனிதரிடையே தனிச் சிறப்புப் பெறும் ஜீவன், அம்மா என்கிற அமுத மொழி தான்! உலகின் மூலை முடுக் கெல்லாம் அனைத்து மனிதர்களாலும் அன்றாடம் முணுமுணுக்கப்படும் சொல் இந்த அம்மா என்கின்ற அன்பு மொழி. வாழ்க்கைத் தத்துவத்தின் திறவுகோலாய் மனிதரில் மட்டுமல்ல, உலகின் ஒவ்வொரு ஜீவன்களுக்கும் உருவம் கொடுப்பதும் இந்தத் தாய்மை தான்!.....

ஈரைந்து மாதங்கள் இரவுபகலாகக் கண்விழித்து பாரமும் சுமந்து பரிதவிக்கும் ஜீவன்கள் இவர்கள்! தோளிலும், மார்பிலும் தூக்கி அணைத்து நின்று நாளும், பொழுதும் தம் மகவுக்காய் மன்றாடும் பந்தம் இவர்க ளுக்கு மட்டுமே சொந்தம்!......

சொந்தம் இவை மட்டுமல்ல!..... சோகங்களும், கண்ணீர் அலைகளும் கூடத் தான்!. உணவை மட்டுமல்ல, உணர்வுகளையும் கட்டுப் படுத்தி ஈரைந்து மாதங்கள் இவர்கள் செய்யும் யாகம் எழுத்தால் வடிக்க முடியாத காவியம்.......

வேதனைகளில் வேகம் கூடியதும், சோகம்கூடியதும் பிரசவ வேதனை..... பிரசவம் என்னும் அந்தப் பிறப்பைக் காண இறப்பின் எல்லை வரை போராட்டம் தொடர் கிறது. மனித வாழ்க்கையே ஒரு போராட்டம். ஆனாலும் இது போராட்டமே வாழ்க்கை.

எத்தனை தான் சாதனை செய்ய ஒரு ஆணால் முடிந்தாலும், இந்த வேதனையான, சோதனையான சாதனையே நிலை நாட்ட ஒரு பெண்ணால் தான் முடிகிறது..... இங்கே தான் பெண் ஒரு படைப்பின் சிகரமாகிறாள்!......

தாய்மையின் தவிப்பு வரிகளுக்கும், வார்த்தை களுக்கும் அடங்காதவை.... உதிரத்தால் எழுதப்பட்ட உறவு அங்கு காலகாலமாக, இறப்பின் எல்லை வரை தொடர்கிறது!

பாயினிலே நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடக்கும் போதும் தாயின் உள்ளம் தன் மகவு பற்றியே துடிக்கும்! அதனால் தான் அம்மா என்ற சொல்லுக்குத் தமிழில் அன்பு என்றொரு அர்த்தமிருக்கிறது....

இரவுகள் பலவற்றை ஈரமாக்கி, உறவுகளையும், உணர்வுகளையும் தூரமாக்கி துன்பத்திலும் இன்பங்காண இவர்களால் மட்டும் தான் முடிகிறது!

இந்த உணர்வுகள் மனிதருக்கு மட்டும் தான் சொந்தமானதல்ல! குட்டிகளைப் பாலூட்டிச் சீராட்டும் நாயும், குஞ்சுகளைத் தன் சிறகினுள் பொத்தி வளர்க்கும் கோழியும், தன் கன்றைத் தொட்டாலே மூர்க்கம் கொள்ளும் பசுவும் நாம் கால காலமாகக் கவனித்து வருபவை.....

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பதும் "நாட்டுக்கு ராசாவானாலும் தாய்க்கு



படிப்பகம்

www.padippakam.com

மகன்" என்பதும் வழி வழி வந்த மரபுகளின் வெளிப்பாடுகள்!

மண்ணில் வாழும் தெய்வங்களாய், மறக்க முடியாத உறவுகளாய் தொடரும் இந்த உறவுகள் பூஜிக்க வேண்டிய புனிதமானவை...... இதய அறைகளில் நிரந்தரமாக சேமித்து வைக்க வேண்டிய நினைவுகள் இவை....

காற்றைப் போல, கடலைப்போல், ஒரு நல்ல கவிதையைப் போல் இந்தத் தாய்மை எனும் உறவும் அழிக்க முடியாதது!..... இந்த உணர்வுகள் எங்கள் ஒவ்வொருவர்க்குமே சொந்த மானவை தான்!

தனி மனிதன் தலை நிமிர்ந்து நிற்கத் தாயவள் செய்யும் செயல்கள் அவன் மண்புதையும் நாள் வரை நினைவு கூறப்பட வேண் டியவை.... கால காலமாகத் தொடரும் இந்த உறவு என் பேனாவின் பிரசவமாகி யுள்ளது......

(சந்திப்போம்!....)

வறுமை

சதை பிடித்து விடுகின்றாள் அழகு நிலையத்தில் எலும்புக் கைகளாக

-காசி ஆனந்தன்

## பாராட்டுகின்றோம்

கனடாவில் தமிழ் பத்திரிகைத் துறையிலும், ஆக்க இலக்கியத் துறை யிலும் நன்கு அறியப் பட்ட ஒருவரான அளவெட்டி சிறீசுக்கந்தராசா ஆங்கில ஆக்க இலக்கியத்திலும் தனது பங்களிப்பை செலுத்தி சர்வதேச ஆங்கிலக் கவிதைப் போட்டியொன்றில் பரிசு பெற்றுள்ளார். அமெரிக்காவில் Mary land என்ற நகரில் இயங்கிவரும் The National Library of Poetry என்ற தேசிய கவிதை நிலையம் சர்வதேச ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டியென்றில் இவரால் எழுதப்பட்ட The Winds of the VITA என்ற தலைப் பிலான கவிதை அதி சிறந்த பத்துக் கவிதைகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்ப ட்டுள்ளது. அத்துடன் அவுஸ் திரேலியா நாட்டின் விக்டோ ரியா நகரில் இயங்கி வரும் "இலங்கைத் தமிழ்ச் சங்கம்" கடந்த மாதம் நடாத்திய முத்தமிழ் விழாவை யொட் டிய சிறுகதைப் போட்டியில் இவரது "நிலம்" என்ற சிறுகதை முதற் பரிசைப் பெற்றுள்ளது. மேற்படி சிறுகதைப் போட்டியும் சர்வதேச ரீதியிலேயே நாடாத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த இரண்டு சிறப்புக்களையும் பெற்றும் அமைதியாக இருந்து இலக்கியச் சேவை புரிந்து வரும் கனடிய தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுச் செயலாளரான சிறீசுக் கந்தராசாவை "புன்னகை மலர்" வாழ்த்தி நிற்கின்றது. (ஆ+ர்)

நாங்கள்
புதியவர்கள்தான்
ஆனாலும்
புதுமைகள் செய்ய
வல்லவர்கள்
உங்களது
மங்கள வைபவங்களை
எங்கள் கமராக்கள்
கலையுணர்வோடு
படம் பிடிக்கும்.

S.P.S
Video Vision
தொடர்புகளுக்கு
SHIVA அல்லது NESAN
TEL: (416) 925-6046

திருத்த வேலைகள்
TELEVISION
V.C.R
MICROWAVE
இன்னும் பல

சகல எலக்ரோனிக் திருத்த வேலைகளுக்கும் எம்மை அழையுங்கள்
கமல்
Tel: (416)286-6652

SUGANTHAN VIDEOS
எங்கள் அனுபவத்தின் வெளிப்பாடுகள் உங்கள் வைபவங்களை ஒளிப்பதிவு செய்யும். ஒரு தடவை அழைத்துப் பாருங்கள்.
T. RAMANATHAN
Tel: (416) 752-0646



படிப்பகம்

www.padippakam.com

**ஸ்காபுரோ மாநகரில் புதியதோர் அனைத்துலகக் களஞ்சியம்**

# மஞ்சுளா பாஷன்

**5818 SHEPPARD AVE. E. #203**

*SCARBOROUGH*

(SPICELAND இற்கு முன்பாக)



- மங்கையர் தம் நெஞ்சையள்ளும் வகை, வகையான காஞ்சிபுரம், மைசூர் சில்க், காஷ்மீர், பனாரஸ் புடவைகள், பஞ்சாபி உடைகள், நவநாகரிக ஆடைகள்.
- இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பற்றிக்(Battic)உடைகள்.
- ஆண்களுக்கான வண்ணமயமான சட்டைகள், பருத்தி பட்டு வேட்டிகள்.
- சிறார்களுக்கான அழகிய ரெடிமேட் ஆடைகள்.
- இலங்கை, சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய டிசைன்களில் 22 கரட் தங்க நகைகள், ஆபரணங்கள்.
- இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எவர் சில்வர் பாத்திரங்கள், மொத்தமாகவும் சில்லறையாகவும் விளையாட்டுப் பொருட்கள்,
- அன்பளிப்புப் பொருட்கள், சோடினைப் பொருட்கள், தலைநகை, தலைப்பாகை, விற்பனைக்கும், வாடகைக்கும்.
- சுவாமிப்படங்கள், ஊதுபத்திகள், ஒலிநாடாக்கள், CDக்கள் இன்னும் பல பல.

**ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்**

**உண்மை அறிவீர்! அறிவீர்!!**

## மஞ்சுளா பாஷன்

**Tel: (416) 297-9875 / 297-5872**

படிப்பகம்

www.padippakam.com

# SSS DRIVER TRAINING

Tel: (416) 275-1821 *(Bus)*
(416) 897-3567 *(Res)*
Pager (Numeric): **375-5035**




**SIVA S. Sothy**
*Driving Instructor*

- **Learn to drive with SSS Driver Training**
- **Govt. Licenced Instructor Siva. Sothy will teach you the best to ensure you to pass the road test.**

* **Metro** பெரும்பாகத்தில் அனைத்து தமிழ் மக்களதும் அபிமானத்தைப் பெற்ற ஒரே தமிழ்ப் போதனாசிரியர்.
* குறைந்த கட்டணத்தில் சிறந்த போதனை.
* வரிக்கழிவுச் சலுகைகள்.
* முழுமையாக காப்புறுதி செய்யப்பட்ட **Dual Brakes** இணைக்கப்பட்ட தன்னியக்க வாகனங்கள்.
* தெளிவான முறையில் அச்சிடப்பட்ட விளக்கப்பட்ட குறிப்புகள்.
* **Road test** இற்கான திகதி நிர்ணயம் மற்றும் வாகன வசதிகள்.

**FREE PICK- UP & DROP OFF**



**489 Lana Terrace**
**Mississauga, Ontario**

**Serving Cities**
*Mississauga*
*Toronto*
*Scarborough*
*and North York*

படிப்பகம்